163

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி க. ரக்தாக்ஷி-ஞு ஆனி-மீ பகுதி சு

Vol. 1. June & July. No. 6.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் அநாதி.

(121-ம் பக்கத் தொடர்ச்சி.)

அந்த யோகிகள் நிமிச் சக்ரவர்த்தி யாகஞ்செய்யுமிடத்துக்கு வந்தார்கள். அவர்களுடைய சிந்ஹங்களின் தோற்றத்தைக் கண்ட இராஜன் முதலியோர் இவர்கள் எம்பெருமானையே உபாயோபேயமாகப் பற்றிய நாராயண பராயணர்களாவார் என்று தெரிந்து பூஜித்தார்கள். இங்கு இவர்கள் கைக்கொண்ட சிந்ஹங்களாவன. நெற்றியின்மேல் விளங்கும் ஊர்த்வ புண்ட்ரமும், தோள்களில் திருவிலச்சனைகளும், திருமணித் தாவடங்களுமேயாம். இக்கதை பாகவதம் 11-வது ஸ்கந்தத்தில் விளங்க ஓதப்பெற்றுளது. இப் பாகவதத்திலே கீழ் ஸ்கந்தத்தில் மேற் குறிப்பித்தபடி "யேபாஹுமூல பரிசிந்ஹித சங்கசக்ரா" என்று வைஷ்ணவ லக்ஷணத்தைக் குறித்துணர்த்திய முறையில் இங்கும் அதுவேயாகவேண்டும். நிமிச்சக்ரவர்த்திக்கும், அந்த யோகிகளுக்கும், நடந்த ஸம்வாதத்தின் தொடக்கத்தில் 'தர்மாந் பாகவதாந் யேவை பகவதா ப்ரோக்தா:" பகவானால் சொல்லப்பட்டது பாகவத தர்மமென்னும், பாகவத தர்மங்களைச் சொல்ல வேண்டுமென்றும், உரைக்கப்பட்டுள்ளன. முடிவில் பாஞ்சராத்திரத்திற் சொல்லிய முறையைத் தாங்களுங் கைக்கொண்டு தங்கள் உபதேசத்தினால் பிறர்களையுங் கைக்கொள்ளும் படிசெய்து போந்த ஆழ்வார்களுடைய அவதாரத்தைக் குறித்துக் காட்டினார்களென்றுஞ் சொல்லப் பட்டுளது. "க்வசித்க்வசித் மஹாபாகா த்ரமிடேஷுச பூரிச:" பெரியோர்கள் சிற்சிலவிடங்களிலும், மிகுதியாகத்

தமிழ்த் தேசங்களிலும், அவதரிக்கப் போகிறார்களென்றும், இன்னும் பலபடியாலும், காட்டியிருக்கிறார்கள். பாரதம் ஆரண்யபர்வத்தில், தர்மபுத்திரர் தீர்த்தயாத்திரை ஸந்தர்ப்பத்தில் "குமார்யா: கதிதா: புண்யா: த்ரமிடேஷுச பூரிச:" என்று கூறப் பட்டுள்ள சுலோகத்திற்கு, 'குமார்ய: பகவந்தம் ஸ்திரீபாவநயா காதாரூபேண அநுபவந்த: பக்த விசேஷா:' என்று வ்யாக்யானம் செய்யப்பட்டுளது. இதன் பொருள் பக்தர்கள் தங்களை ஸ்திரீக ளாகப்பாவித்து பாசுர முகத்தாலே எம்பெருமானை அநுபவித்தார் களென்பதாம்.

சில இதிஹாசங்களுக்கு அத்வைத பரமாக வ்யாக்யானம் செய்த நீலகண்ட தீக்ஷிதரும் இவர்கள் அவதாரத்தை பாரதத் திலும் குறிப்பித்திருப்பதாகக் காட்டியிருக்கிறார். மேல் குறிப் பிடப்பட்ட யோகிகள், இவ்வுலகிலிருக்கும் நாள் ஈசுவர கைங்கர்ய மாகவும் போது போக்குகைக்காகவும் பாஞ்சராத்திரத்திற் சொல் லிய முறைப்படி எம்பெருமானுடைய திருவாராதனைக் கிரமத்தை விஸ்தாரமாகக் கூறியுள்ளார்கள். நிற்க அவ் யோகிகள் "நீள்கடல் சூழ் இலங்கைக்கோன்—தோள்கள் தலை துணி செய்தான்—தாள்கள் தலையில் வணங்கி—நாள் கடலைக் கழிமினே" என்று ஆழ்வார் உப தேசித்தபடி எம்பெருமானை உபாயோபேயமாகப்பற்றிய அடியார் கள் செய்யத்தக்க காரியம் பிறிதில்லாமையால் அவர்கள் போது போக்குக்காக ஸ்ரீ ராமாயணத்தை அநுஸந்திக்கும்படி உபதேசித் தார்கள். அன்றியும் மயர்வறமதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார் கள் அருளிச் செயல்களை ஆசார்யமூலமாக அத்யயனஞ்செய்து காலத்தைக் கழிக்கும்படியும் உபதேசித்தார்கள். இக்கலியுகத் தில் தோன்றிய ஆழ்வார் பிரபந்தங்களை நிமிச் சக்ரவர்த்தி காலத் தில் யோகிகள் உபதேசித்தார்கள் என்பது எவ்வாறு பொருந்து மெனின்? யோகிகளுக்கு எல்லாவற்றையும் யோக திருஷ்டியால் சாக்ஷாத்கரிக்கும் தன்மை உளதாகையால் பின் உண்டாகப் போகிற ஆழ்வார்கள் பிரபந்தங்களும் அவர்கள் ஞானக் கண்ணிற்கு விளங் கின. அவை உலகிற்குப் பெரும் பயனுயிருத்தலைக் கண்டு உப தேசித்தார்களென்று கொள்ளவேண்டும். அன்றி "ஸம்ஸ்கிருத ச்ருதயோர் யத்வத் த்ராமிடச்ருதயஸ்ததா நித்யாஸ் தத்வத் ப்ர ணீயந்தே முநிபிஸ்து கலௌ கலௌ" என்றபடி ஸம்ஸ்கிருதவேத

மானது நித்யமாயிருந்தும் அது அடிக்கடி ருஷிகளால் பிரகாசிக்கப் படுகிறதுபோல் தமிழ் வேதங்களும் நித்யங்களாம். கலிதோறும் ருஷியென்றும், முனியென்றும், சொல்லப்படுகிற ஆழ்வார்களால் பிரகாசிக்கப் படுகின்றனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால், இந்தத்திவ்யப்பிரபந்தங்கள் நித்தியமாயுள்ளனவே. கலிகாலத்தில் ஆழ்வார்களால் வெளியிடப்பட்டனமாத்திரமேயொழிய வேறில்லை. ஆகையால் அவை எப்போதுமுண்டு. அந்தக்காலத்தில் அஸர்வஜ்ஞதுர் ஜ்ஞேயமாய் அஃதாவது ஸர்வத்தையும் தெரிந்து கொள்ளக்கூடிய சக்தியற்றவர்களால் அறியக்கூடாததாய் சில தர்மங்கள் சிலவிடங்களில் இருந்தன. அவைபோல் இதுவும் இருந்திருக்கவேண்டும். அதுபற்றியே பாஞ்சராத்திரத்தில் சுபத்தை ஆரம்பிக்கும்போதும் அசுபத்தை முடிக்கும்போதும் இன்ன சிலவிடங்களில் பக்தர்கள் சொன்ன ப்ரபந்தங்களால் அநுசந்திக்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. விசுவாமித்ரர் தமது தவத்தினது பெருமையால் காயத்ரீயைக் கண்டு பிடித்தாரென்றுகொண்டு பிராஹ்மணர்களும் ருஷிகளும் "சாவித்ரியாருஷி: விசுவாமித்ர:" என்றநுசந்திக்கிறார்கள். விசுவாமித்ரருக்கு முன்னுள்ள பிராஹ்மணர்களும், ருஷிகளும், காயத்ரீஜபம் செய்யவில்லையென்று அந்தப்ரமாணத்தைக்கொண்டு சொல்லமுடியாது. அங்கு எந்தவிதமான ஸமாதானத்தைக்கொண்டு காயத்ரீஜபத்தை முந்தியுள்ளதாகக் கொள்ளுகிறோமோ அதுபோல்இங்கு திவ்யப்ரபந்தம் முந்தி அநுசந்திக்கப்பட்டதென்று கொள்வது சமாதானமாகும். இனி, இவர்கள் ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்தியைக்கொண்டு போது போக்கும்படி உபதேசித்தார்களென்கைக்கு மூலமென்னென்னில் மேலே காட்டிய ஆராய்ச்சியின்படி அப்படிக்கொள்ளத்தட்டில்லை. அஃதாவது இந்த திவ்ய ஸூக்திகளுக்கு திவ்யப்ரபந்தம் என்கிற திருநாமம் மும்மதத்தார்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டதே. அதில், ப்ரபந்த சப்தத்துக்கு ஏற்பட்ட பொருளாவது இரத்தினத்தை முகமறிந்து கோர்க்கவல்லானொருத்தன் அதை மாறி மாறிக் கோர்த்து அநேகவிதமாய் இசைத்து அழகுபார்த்து அநுபவிப்பதுபோல் எம்பெருமானுடைய அவதாரங்களையும், அவதரித்துச் செய்தருளும் லீலாவிசேஷங்களையும், இவையிரண்டுக்கும் அடியான குணவிசேஷங்களையும் மாறி மாறிச் சேர்த்தனுபவித்து அவ்வநுபவத்தாலுண்டான ப்ரீதி உள்ளடங்காமல் வழிந்து அது சொல்லாய் விழுந்து ப்ரபந்தமாய்த் தலைக்கட்டினதாகையாலே

எம்பெருமானுடைய குணங்கள் அதடியாக வருமவதாரங்கள், அவதாரத்தைப்பற்றிவரும் லீலாவிசேஷங்கள் இவைகளுக்குண்டான ப்ரகர்ஷேணபந்தத்தை அதாவது நன்றாயுள்ள சேர்க்கையைச் சொல்லுகிறதாகையால் இதுக்கு ப்ரபந்தமெனப் பெயர் ஏற்பட்டது. இப் பிரபந்தம் எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபா மூலமாய்த் தோன்றியது. அஃதாவது ஒருகாரணமின்றிக்கே கரையழியப்பெருகும் அவனது கருணை காரணமாகத் தோன்றியதென்க. இவ்விஷயத்தைப் பட்டர் ஒருசமயம் எடுத்துக்காட்டியதுண்டு அதுவருமாறு திருவத்யயனோத்ஸவத்தில் திவ்யப் பிரபந்தத்தையே பெருமாள் திருமுன்ஸேவிக்கக் காரணமென்? வியாசபராசாதிகளுடைய ப்ரபந்தங்களும் பலவுண்டே அவற்றைக் கொண்டு எம்பெருமானை உகப்பிக்காதொழிவானென்னென்று சிலர் பட்டரைக்கேட்க அதற்குப்பட்டர்

* நப்ரீதி ரஸ்தி மமவக்ஷவிலாலிதாயாம்லக்ஷ்ம்யாந்தததா ஸகலபூத நிதாநவீம்நீ, மஜ்ஜந்ம கர்மகுணபந்தயுதாந் ப்ரபந்தாந் ஸம்கீர்யத்யநக பக்தஜநெயதைவம் என்று எம்பெருமான் திருவுள்ளத்திற்குப் பேருகப்பாயிருப்பது இவ்வாழ்வார்களின் ப்ரபந்தங்களாகையால் இவையே எம்பெருமான் திருமுன்பு அநுஸந்திக்கத் தக்கனவென்றறியவேண்டும்.

காரப்பங்காடு ஸ்ரீ உ. வே. சிங்கப் பெருமாள் ஸ்வாமியின்
தமையன் குமாரரும்
அவரால் ஆதரித்துக் கடாக்ஷிக்கப் பெற்றவரும்,
அந்தேவாஸியுமான
☞ வெங்கடாசார்யர், சேனங்குளம்.

---

* இதன் பொருள் என்னுடைய குண, கர்மா, ஜன்மங்களின், இவைபைப்பற்றிப் பேசுகிற ப்ரபந்தங்களைச் சொல்லுகிற தோஷமற்ற பக்தர்களிடத்தில் எனக்கு மிகவும் பிரியமுண்டு. அவ்வளவு பிரியம் எனக்கு என் மார்பிற்கொண்டு என்றால் விசேஷமாகப் பிரீதி பாராட்டுதற்குரியவளாகிய லக்ஷ்மியிடத்திலும் கிடையாது. இந்த சுலோகத்தில் என்னுடைய குண, கர்ம, ஜன்மங்களின், இயைபைப்பற்றிப் பேசுகிற பிரபந்தம் என்றது ஆழ்வார் அருளிய பிரபந்தங்களேயாம். அங்கு பக்த ஜனங்கள்என்றது ஆழ்வார்களேயாம். ஆகவே ஆழ்வார்கள் அருளிய பிரபந்தத்தில் எனக்கு மிகவும் பிரியமுண்டு என்று ஸர்வேசுவரன் அருளிச்செய்தான்.

ஸ்யமந்தகமணி விருத்தாந்தம்.

(90-ம் பக்கத் தொடர்ச்சி.)

சத்ராஜித்து தன்னாலே கண்ணனுக்கோர் அபவாதம் நேர்ந்ததென நினைத்து, இதை யெவ்வாறாவது போக்கிக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்து தன்புத்திரியாகிய சத்தியபாமையைக் கண்ணபிரானுக்கு விவாஹஞ்செய்து கொடுத்தனர். அச்சத்தியபாமை அழகே ஒரு பெண்ணுருவெடுத்துள்ளதெனச் சொல்லும் தன்மையினள். ஆதலான், முன்னர் அக்குரூரன், கிருதவர்மா, சததன்வா, முதலான யாதவர்கள் எங்கட்கு அக்கன்னிகையைத் தரவேண்டுமெனக் கேட்டிருந்தார்கள். அவர்கள் விருப்பின்படி அச்சத்தியபாமையைக் கொடாததினால் சத்திராஜித்தரிடத்தில் அவர்கள் பகையைப் பாராட்டிவந்தார்கள்.

ஒருநாள் அவர்களுள் அக்குரூரன் கிருதவர்மா முதலானவர்கள் சததனுவா வீட்டிற்குச் சென்று, சததன்வாவை நோக்கி ஓ சததன்வாவே! இந்த சத்திராஜித்தனிடத்தில் உன் கன்னிகையை நமக்குரிமையாகக் கொடுக்கவேண்டுமென்று, கேட்டோமல்லவா? அவ்வாறிருக்க, எங்களையும் உன்னையும் இவன் மதிக்காமல் அவன் தன்புத்திரியை கிருஷ்ணனுக்கு உரிமையாகக் கொடுத்துவிட்டான். இவனுடைய துஷ்டத்தனத்தைப் பார்த்தீரா! இத்தகைய துஷ்டன் வாழ்ந்திருக்க நாம் பார்த்துக் கொண்டிருப்பது அழகா! நீவீர் பராக்கிரமம் உடையீரன்றோ! எவ்வாறாவது இந்தச் சத்திராஜித்தனை நீர் கொன்று அவன் வைத்திருக்கிற இரத்தினத்தைக் கைக்கொள்ளக் கடவீர். இது விஷயமாய்க் கிருஷ்ணன் எதிர்ப்பானெனக் கருதுவீரேல்; அக்காலத்து யாங்கள் உமக்குப் போர்க்குத் துணையாக வருகிறோம். "அஞ்சற்க" என்றனர். இது கேட்ட அவன் அவ்வாறே செய்கிறேனென உடன்பட்டு, ஒருநாள் சத்திராஜித்தர் தூங்கிக்கொண்டிருந்த காலத்து அவரைக் கொன்று இரத்தினத்தை அபகரித்துக் கொண்டான்.

அக்காலத்து, கண்ணபிரான் துரியோதனாதியர்களின் சூழ்ச்சியால் பஞ்சபாண்டவர்கள் அரக்குமாளிகையில் எரிந்துபோனார்களென்ற செய்திகேட்டு, அவர்கள் வாசஞ்செய்து கொண்டிருந்த

வாரணாவதபுரத்திற் கெழுந்தருளினார். பாண்டவர்கள் அரக்கு
மாளிகையின் சுரங்கத்தின் வழியாய்த் தப்பி, வேதவியாசருடைய
அநுக்கிரகத்தால் வேற்றுருவெய்தியிருப்பதைத் தான்நன்கறிந்தும்,
ஒன்றுந் தெரியாதவர்போல ஐயோ! பாண்டவர்கள் போயொழிந்
தார்களே; என் செய்வதெனத் துக்கக்குறி தோன்ற நடித்தனர்.
இவர் இவ்வாறு நடிக்காதிருப்பரேல், பஞ்சபாண்டவர்கள் உயி
ரோடிருக்கிறார்களென துரியோதனாதிகள் ஐயங்கொண்டு, அவர்க
ளிருக்குமிடத்தைக் கண்டுபிடித்து இன்னும் வேண்டிய துன்புறுத்
துவார்களெனக் கருதி இங்ஙனம் நடித்தாரெனக் கொள்க.

சத்திராஜித்து உயிர்நீத்துக் கிடத்தலை சத்தியபாமை பார்த்து
அடங்காத் துன்பமடைந்து சததன்வாவினால் உமக்கு இத்துணைத்
துன்பம் நேர்ந்ததே அந்தோ! என் செய்வேனென வாய்விட்டலறி
கோபமுற்று ஓர் இரதத்தின்மீதேறி வாரணாவதத்திற்குச் சென்று
கண்ணபிரானைக்கண்டு என் பிராணநாதா என்பிதா! என்னைஉமக்கு
மனையாளாகக் கொடுத்தாரென்ற பொறாமையால் சததன்வாவென்
பான் என் தகப்பனாரைக் கொன்றுவிட்டு மிக்க ஒளியும், பெருமை
யுமுடைய சிமந்தகமணியையும், அபகரித்துக் கொண்டான்.
இது தேவரீருக்குச்செய்த அவமானமேயன்றி வேறன்றென
மூர்ச்சித்துக் கிடந்தாள்.

கண்ணபிரான், 'பெண்ணே' நீ, ஒன்றுக்கும் வருந்தவேண்
டாம், நீ சொல்லியபடி இது எனக்குச் செய்த அவமானந்தான்,
இவ்வாறு செய்த அந்தத்துர்க்குணமுடையவனை என்னாற்றலால்
வென்று உன் மனக்கவலையைப் போக்குவேனெனத் தேறுதல்
கூறி துவாரகைக் கெழுந்தருளி, தம்தமையனாராகிய பலராமரை
ஏகாந்தமான ஓரிடத்திற்கழைத்துச்சென்று, பிரசேனன் சிங்கத்
தினால் மாண்டொழிந்தான்; சத்திராஜித்தும், சததன்வாவால்
உயிர்நீத்தொழிந்தான்; இவ்விருவரும், ஒழிந்தாராதலால்; சிமந்த
கமணி நமக்குப் பொதுவாகுமேயன்றிப் பிறருக்குரித்தாகமாட்
டாது. ஆதலால், அம்மணியையும் அபகரித்து சத்திராஜித்தை
தையுங்கொன்ற சததன்வாவை நாம் கொல்லுதற்கு முயலவேண்
டும் என்றனர். அதற்குப் பலராமரும் உடன்பட்டார்.

பலராமகிருஷ்ணர்கள், தன்னைக் கொல்லப் பிரயத்தனமுற்
றிருப்பதை சததன்வா கேள்வியுற்று அந்தோ! ஆபத்து நேர்ந்து

விட்டது இனி என் செய்வது என மனந்தளர்வுற்றான். அப்பொழுது அவன் கிருதவர்மா முதலானவர்களிடஞ் சென்று, எனக்கு இதுபொழுது முன்னர் நீவிர் கூறியபடி துணையாயிருக்க வேண்டுமெனக் கேட்கவுன்னி, முன்னர் கிருதவர்மாவிடஞ்சென்று எனக்கிதுபொழுது பலராம, கிருஷ்ணர்களால் ஆபத்து நேரும் போல் தோற்றுகிறதாதலான், துணை செய்ய வேண்டுமென வேண்டினன். அதற்கு, கிருதவர்மா, இப்பொழுது நாம் இவனுக்குத் துணையாகச்சென்றால், பலராம கிருஷ்ணர்களால் நமக்கு முடிவு நேருமெனத் தனக்குள்ளே கருதி; ஐயா! சததன்வாவே! உனக்குத் துணையாயிருந்து, பலராமகிருஷ்ணர்களை எதிர்க்கும் அத்துணைப் பலமுடைய னல்லேனென்று,

"அற்ற குளத்தி லறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்"

என்றாங்கு உறவற்றவனாய்ப் பேசினான். அதுகேட்டு சததன்வா அக்குரூரரிடம்வந்து தனக்கு நேரப்போகிற ஆபத்தைக் கவலையுடனுரைந்து, எனக்கு இதுபோழ்து துணையாயிருத்தல் வேண்டுமென வேண்டினன். அஞ்ஞான்று அக்குரூரர் சததன்வாவே! பலராமகிருஷ்ணர்களின் வீரமுடைமையைக் கூறுகிறேன் கேட்பாயாக கண்ணபிரான் எதிரிகளை யழிக்கவேண்டுமெனத் தம் கண்ணால் உறுத்துப்பார்ப்பரேல்; எதிரிப்படைகளெல்லாம் அழிந்துவிடும். அதுநிற்க போர் செய்தற்குரியதும் எல்லாவாயுதங்களிற் சிறந்து நிற்பதும் எவராலும் தடுக்க முடியாததுமான சக்கரப் படையுடையவர். பலராமரோ, தமக்குரிய கலப்பை ஆயுதத்தை ஏந்திக்கொண்டு, எதிர்த்தவர்களைப்போக்கக் கருதுவரேல், தேவராயினும், தானவராயினும் வித்யாதரராயினும், யக்ஷராயினும், மற்றெவராயினும், அவருடனெதிர்த்துப் போர்செய்ய வல்லாருண்டோ? ஆதலால், உன்னோடு சேர்ந்து அவர்களுடன் போர் செய்தற்கு அத்துணை ஆற்றலுடையேனல்லேன்; வேறு யாரையாவது நீ அடைக்கலமாகப் பற்றுவாய் எனக் கூறினர். அதுகேட்ட சததன்வா அக்குரூரரே! நீவிர், எனக்குத் துணைசெய்ய முடியாதெனக் கூறினீராயினும்; ஒப்பற்ற சிமந்தகமணியையாவது என்னிடமிருந்து பெற்றுக் காப்பாற்றித்தரல் வேண்டும். இவ்வுபகாரத்தையாவது இச்சமயம் நீவிர் அவசியம் செய்வீரென நம்புகிறேனென்றான். அதற்கு, அக்குரூரர், என்னிடத்தில் இரத்தி

னத்தைக் கொடுத்துவைக்கும் விஷயத்தை உயிருக்கு முடிவு நேரினும் யாரிடத்திலும் சொல்லேனென, உறுதிமொழிகூறி நீ தருவையகில் யான் அம்மணியைக் காப்பாற்றித் தருகிறேனென்றனன். அதற்கும் சததன்வா இசைந்து உறுதிமொழி கூறி அம்மணியைக் கொடுத்து மிகவேகமுடையதும் நூறுகாதமளவும் இளையாது செல்லும் திறமுடையதுமான ஓர்பெண் குதிரையின் மீதேறி ஓடிப்போயினன்.

இவன் ஓடியதைப் பலராமகிருஷ்ணர்களறிந்து சைனிய, சுக்கிரீவ, மேக, புஷ்பவலாகங்களென்கிற நான்கு குதிரைகள் பூட்டிய இரதத்தின் மீதேறி, அந்தச் சததன்வா ஓடிச்சென்ற வழியைப் பின்றொடர்ந்து சென்றனர். சததன்வா ஏறிச்சென்ற குதிரை நூறுகாதம் வரை மிகவிரைவாய் ஓடியதால், மிதுலா நகரத்தின் சமீபமான ஓர் காட்டில், அதன் குடலறுந்து மாண்டு போயிற்று. பின்னர் சததன்வா கால்நடையாய் ஓடலுற்றான், பலராமகிருஷ்ணர்கள் வழியில் ஓர்குதிரை மாண்டு கிடத்தலைக் கண்டு, இது, சததன்வா ஏறிச்சென்ற குதிரையாயிருத்தல் வேண்டுமென அநுமானித்து; இரதத்தின் மீதிருந்தபடியே எதிர்முகமாக நோக்கினர். சேய்மையில் ஓர் ஆண்மகன் ஓடுதலைக்கண்டு, இவனே சததன்வாவெனத் தீர்மானித்தனர். அப்பொழுது கண்ணபிரான் பலராமரை நோக்கி அண்ணா! அவன் கால் நடையாய் ஓடுகின்றானாதலான்; அவனை நாம் இரதத்தின்மீதேறிச் சென்று பிடிப்பது நியாயமன்று. அவனோ, நமது சத்திராஜித்தர் தூங்கிக்கொண்டிருந்தகாலத்து அவரைக்கொன்று ஸ்யமந்தகமணியையும் அபகரித்த மஹாப்பாபி இவனைக்கொல்வதால்,

> "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களை கட்டதனோ."

என்றபடி பாபம் வராது. நீவிர், இரதத்தின் மீதிருக்கக்கடவீர் என்று குதிரைகளை உற்று நோக்கினர். அசுவஹ்ருதயம் அறிந்தவராதலான் இக்குதிரைகள் சததன்வாவின் குதிரை இறந்து கிடத்தலைக்கண்டு மனக்கலக்கமுற்றிருக்கின்றன என்றறிந்து அண்ணா! இக்குதிரைகளை இனி, வேறிடங்கட்குக் கொண்டுபோகாது ஓரிடத்திற் கட்டியபடியே வைத்திருப்பீர் எனக்கூறி சத்தன்வாவைப் பிடிப்பதற்குச் சென்று நீண்ட வழிகளைக் கடந்தனர்.

(தொடரும்.)

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

(112-ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்படி ப்ரமாணங்களின் ஸ்வரூபமும், லக்ஷணமும், ஸங்கியைகளும் சொல்லி, இடையே ப்ராஸங்கிகமாய் ப்ரமாதாக்களின் அவதாரப்ரஸ்தாவமடியாக வந்த ஜாதிசங்காபரிஹாரமும் செய்யப்பட்டது.

இனி ப்ரமேயம் நிரூபிக்கப்படும்.

ப்ரமேயங்களாவன ப்ரமாணங்களால் உள்ளபடி அறியப்படுமவைகள்; அவையாவன தத்வ ஹித புருஷார்த்தங்கள்.

அவற்றுள் தத்வமாவது, சேதனனுக்கு ப்ராப்யமாய் அவனுக்கு இஷ்டமான பலன்களைக் கொடுக்குமதாய் இவனுற் செய்யப்படும் உபாஸந முதலியவற்றிற்கு விஷயமாயுள்ள பரதேவதை. (இது பரதத்துவமாகையால், அபரதத்துவமாகிற சேதநாசேதனங்களும் சரீரதயா இதிலடங்கும்.)

ஹிதமாவது அந்த, பரதேவதையான ஈசுவரனை அடைவதற்கு ஸாதனமாயும், அவன் பலனளிக்கும்படி அவனை உவப்பிப்பதாயுமுள்ள பக்திமுதலான உபாயங்களாம்.

புருஷார்த்தமாவது புருஷனால் விரும்பத்தக்கவைபான ஐசுவர்ய கைவல்யங்கள். இம்மூவகையான ப்ரமேயங்களுக்குள், தத்வார்த்தமான ஸர்வேசுவரன்—சேதநா சேதனங்களை சரீரமாகக் கொண்டவனும், அவைகளைக்காட்டிலும் விலக்ஷணனுமிருப்பதால் முதலில் சேதநா சேதனங்களினுடைய ஸ்வரூப நிரூபணம் செய்கை ஆவசியகம். இவைகளை உள்ளபடியறிந்து புருஷார்த்தங்களை அடையவேண்டியவன் சேதனனாகையாலே முந்தி சேதனனுடைய ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறது.

சேதன ஸ்வரூபமானது ஈசுவரனுக்குசேஷமாயும், பாதந்திரமாயும், ஜ்ஞாநஸ்வரூபமாயும், ஜஞானமுடையதாயும், நித்தியமாயும், அணுவாயும், சரீரந்தோறும் வேறுபட்டிருப்பதாயும், தேஹேந்திரியமாநப்ராணங்களைக்காட்டிலும் வேறுபட்டதாயுமிருக்கை.

(சேஷத்வமாவது தன்னின் ஆதிக்யமுடையதொன்றின் அம்சமாய், அம்சிக்குத்தன்னால் வைசிஷ்டயமுண்டாம்படி யிருக்கையாம்; இது சேதனனிடத்தில் காணும்போது தாஸ்யமென்று வழங்கப்படும்; இந்தவைலக்ஷண்யத்தாலே) இங்கு சேதனன், ஈசுவரனுக்கு சேஷமாயிருக்கையாவது—தன்னைக்காட்டிலும் பரனாயிருக்கிற ஸர்வேசுவரனுக்கு அதிசயத்தை விளைவிப்பதை விஷயமாகவுடைய இச்சையோடே அவனை அநுவர்த்தித்திருக்கை. இந்த சேஷத்வம் நிருபாதிகமென்றும், ஸோபாதிகமென்றும் இரண்டுவகையாயிருக்கும். இவற்றுள், நிருபாதிகமாவது—ஸ்வரூபப்ரயுக்தமாயிருக்கை. (அதாவது இயல்பாகவேயிருக்கை). ஸோபாதிகமாவது (செயற்கையாலுண்டாவது) ஈசுவரனுடைய குணப்ரயுக்தமாயிருக்கை. இதில் உபாதிபூதங்களான ஈசுவரகுணங்கள் நித்யமாகையால் அவற்றைப் பற்றிவருகிற சேஷத்வமும் நித்யமாயிருக்கும். ஆகையால் இரண்டுவகையான சேஷத்வமும் நித்யமாம்.

இவற்றுள் நிருபாதிகத்துக்கு ப்ரமாணங்கள், திருமங்கையாழ்வார் அருளிச்செய்த திருமொழியுள் (க)"வேம்பின் புழுவேம்பின்றியுண்ணாது" என்கிறபாட்டும், ஸ்ரீராமாயணத்தில், (உ) "யத்யப்யேஷபவேத் பர்த்தா மமார்யே வ்ருத்தவர்ஜித:" என்பது முத

(க) இ-ள்:-வேம்பிலுண்டான புழுவானது அதில் குணதோஷக்ரஹணம் செய்து பிரவ்ருத்தி நிவ்ருத்தி பண்ணாமல், அதின் அதீனமாயிருந்துகொண்டு அதில் போக்கியதா புத்தியோடு அதை அநுவர்த்தித்துக் கொண்டிருக்கும் என்பதாம். இதனால் அந்தப்புழுவுக்கு வேம்பிலிருக்கிற போக்கியதா புத்தியானது எப்படி ஸத்தாப்ரயுக்தமாயிருக்கிறதோ அப்படியே ஈசுவர விஷயத்திலும் சேதனன் குணக்ரஹணம் பண்ணாமலே போக்கியதா புத்தியோடு அவனை அநுவர்த்தித்து அவனதீனமாயிருக்கை ஸத்தாப்ரயுக்தமான நிருபாதிக சேஷத்வம் என்றதாயிற்று.

(உ) இந்த சுலோகம் ஸ்ரீராமாயணத்தில் அநுஸூயையைப்பார்த்து பிராட்டி அருளிச்செய்த வார்த்தை; (இ-ள்) என்னுடைய பர்த்தாவான பெருமாள் குணஹீனராயிருந்தாலும் நான் அவரை அநுவர்த்தித்திருக்கை எனக்கு ஸ்வரூபம் என்பதாம்.

விய வாக்கியங்களும் (ந) "தாஸபூதாஸ் வத்ஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:" (ச) "ஜ்ஞாநாநந்த மயஸ்த்வாத்மா சேஷோஹி பரமாத்மந:" என்பது முதலிய சுலோகங்களுமாம்.

குணத்தால்வரும் ஸோபாதிக சேஷத்வத்துக்கு "குணர்த்தாஸ்யமுபாகத:" என்கிற ராமாயண சுலோகத்தையும், திருமந்த்ரத்திலே பிரணவத்தின் அகாரார்த்த நிருபணத்தில் லுப்த சதுர்த்தியாற் சொல்லப்படுகிற சேஷத்வத்துக்குக் கல்யாண குணங்களை ப்ரயோஜகமாகக்கொண்டு "இதிலே கல்யாண குணங்களையும் சொல்லும்" என்கிற லோகதேசிகன் ஸூக்தியையும் ப்ரமாணமாகக்கொள்க.

பாகவத சேஷத்வம் பகவத்ஸம்பந்தமடியாக வருவதாகையால் அதுவும் ஔபாதிகம். சேஷிபக்கல் பிரீதியோடுகூடிய சேஷத்வமே தாஸ்யமென்று வழங்கப்படும். இதில் சேஷபூதனுலே சேஷிக்குண்டாம் அதிசயம் ப்ரீதிஜநக வ்யாபாரமாகையால் போகதெசையில் சேஷி தாழநின்றுபரிமாறிஞலும் அதற்கு இசைந்திருக்குமது சேஷத்வகார்யம். இந்த அர்த்தத்தை, "போகதெசையில் ஈசுவரனழிக்கும்போது" இத்யாதி வாக்கியங்களாலே லோகதேசிகன் அருளிச்செய்தார்; ஆழ்வார் அருளிச்செய்த "உருகுமால் நெஞ்சம்" என்கிற திவ்ய ஸூக்தியில் இந்த அர்த்தம் ஸ்பஷ்டம்.

இப்படி சேஷியும் சேஷபூதன் விஷயத்தில் ப்ரணயித்வத்தாலும் ஸ்வாதந்த்ரியத்தாலும் சேஷபூதனு யிருக்கிறபடியால் ஸேஷிக்கும் ஸோபாதிக சேஷத்வமுண்டு. இந்த விஷயம்,

---

(ந) இ-ள் தாசா:ச தேபூதா:-தாசபூதா:'பூ ஸத்தாயாம்' என்கிற தாதுவிஞல், பூதா: என்பதற்கு ஸத்தாவிஸிஷ்டர் என்பது பொருள். தாஸபூதா: என்பது ஹேதுகொ்ப்பவிசேஷணமாகையால் தாஸ்யத்தாலே ஸத்தைபெற்றிருக்கிறவர்கள் ஆத்மாக்கள் என்று அர்த்தமாம். அதாவது, ஸர்வேசுவரனுக்கு நிருபாதிக சேஷத்வமான தாஸ்யத்தாலே ஸத்தைபெற்றிருப்பவர் சேதனர் என்றபடி. தாஸ்யமாவது- சேஷிபக்கல் பிரீதியோடேகூடின சேஷத்வமாம்.

(ச) இ-ள்:- ஆத்மாவானவன் ஜ்ஞானஸ்வரூபனும் ஸுகரூபியாயும் பரமாத்மாவுக்கு சேஷமாயு மிருப்பன் என்பதாம்.

"(ரு) இமௌஸ்ம முநி சார்த்தூல கிங்கரௌ ஸமுபஸ்திதௌ".
(சு) லோகநாத: புராபூத்வா ஸுக்ரீவம் சரணங்கத: என்றும் ஸ்ரீ ராமாயணத்தில் வெளியாம்.

இந்த சேஷத்வம் ஜ்ஞாத்ருத்வம் இரண்டும் ஸ்வரூபநிரூபகங்கள். (ஸ்வரூபநிரூபகமாவது ஸ்வரூபம்தோன்றும்போதெல்லாம் தோன்றிக்கொண்டிருப்பது.) இவற்றுள், சேஷத்வம் அந்தரங்கநிரூபகம். அஃதெப்படியெனில், "உபாதத்தே ஸத்தாஸ்திதி நியமநாத்யை: சிதசிதௌ" என்கிற சுலோகத்தின்படி ஸர்வேசுவரன் தன்னுடைய அதிசயத்தின்பொருட்டே சேதநாசேதனங்களுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகளைத்தான் நிர்வகிக்கிறுகையால், அவனுடைய அதிசயாதானமே சேஷத்வமாகையால் இது அந்தரங்க நிரூபகமென்று நிரூபிக்கப்படுகிறது. இந்த அர்த்தம் திருமந்த்ரத்தில் ப்ரணவத்தில் லுப்தசதுர்த்தியாலே சேஷத்வத்தை முன்புசொல்லி மகாரத்தாலே ஜ்ஞாத்ருத்துவத்தைப் பின்பு சொல்லியிருக்கையாலும், ஈட்டில் உதாஹரித்த ஐதிஹ்யத்தாலும் விளங்கும்.

இனி, பாரதந்த்ரியமாயிருக்கையாவது தன்னுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகள் ஈசுவராதீனங்களாகவிருக்கை. ஆகவே ஈசுவரனுக்கு அதிசயத்தை விளைக்கைக் குறுபாக இஷ்டவிநியுக்தமாவதற்கு யோக்யமாயிருக்கை சேஷத்வமென்றும், இஷ்டவிநியுக்தமாகை பாரதந்த்ரியமென்றுங்கண்டுகொள்வது. இவற்றிற்கு உதாஹரணமாக (எ) கட்டிப்பொன்போலேயிருக்கை சேஷத்வ

(ரு) இந்த சுலோகம் விசுவாமித்திரரைப்பார்த்து பெருமாள் இளையபெருமாள் இவர்கள் சொல்லும் வார்த்தை (இ-ள்) ருஷிகளுக்கெல்லாம் சிரேஷ்டமான விஸ்வாமித்ர மஹருஷியே நாங்களிருவரும் தேவரீருக்குக் கிங்கரர்களாக சமீபத்திலிருக்கிறோம் என்பதாம்.

(சு) இ-ள்:- முன்பு லோகத்துக்கெல்லாம் நாதனாயிருந்த பெருமாள் சுக்ரீவனை சரணமடைந்தார் என்பதாம்.

(எ) கட்டிப்பொன்போலிருக்கையாவது:-ஒருவன் மதீயம் என்று அபிமானித்துவைத்திருக்கும் கட்டிப்பொன்னனது அப்பொன்னுடையவனுக்கு, பொன்னுடைமை என்னும் ஓரம்சமாகிய ஸ்வம்மாய், அவனை ஸ்வாமியாக்கிக்கொண்டு, அவன் பொன்னுடையன் என்னும்சிறப்படைதற்கு உறுப்பாய், அவனுக்கு இஷ்டவினியோகயோக்யமாருப்பதுபோல சேதனனும் சர்வேசுவரனுக்கு சரீரமாயிருக்கும் ஓரம்சமாய், தத்விபூதியந்தர்க்கதமான ஸ்வம்மாய், அவனை ஸ்வாமியாக்கிக்கொண்டு, அவன் தாஸவிஷ்டன் என்னும் சிறப்பு (வைசிஷ்ட்யம்) அடைதற்கு உறுப்பாய், அவனுக்கு இஷ்டவிநியோக யோக்யமாயிருக்கை.

மென்றும் (அ) பணிப்பொண்போலேயிருக்கை பாரதந்த்ரியமென்றும் சொல்லுவர்கள்.

இப்படியிருந்துள்ள பாரதந்த்ரியம் ஸ்வரூப பாரதந்தர்ய மென்றும், உபாய பாரதந்த்ர்ய மென்றும், பல பாரதந்தர்யமென்றும் மூன்றுவகையாயிருக்கும். அவற்றுள் ஸ்வரூப பாரதந்த்ர்யம் ஈசுவராதீன ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகமாயிருக்கை. உபாயபாரதந்த்ர்யம் இரண்டுவகையாயிருக்கும். அவன் விதித்த உபாயங்களை அவனுக்குப் பரதந்த்ரனைக்கொண்டு அநுஷ்டித்து பலத்துக்கு அவன்கைபார்த்திருக்குமது கேவல பாரதந்த்ரியமென்றும், "என்னுடம்பிலழுக்கை நானே போக்கிக்கொள்ளேனோ" எனகிற லோகதேசிகன் ஸூக்திப்படி இவன் சரீரமாய், ஈசுவரன் சரீரியாயும் பலபோக்தாவாயுமிருப்பதால் தனக்கு ஒரு ப்ரயோஜனத்தை யுத்தேசித்து உபாயாநுஷ்டானம் பண்ணுகைக்கு யோக்யதையில்லாமல் அவன் பண்ணும் ரக்ஷணத்தை விலக்காமையை ஜ்ஞாபிக்கிற சைதந்ய கார்யமாய் வருவதான ப்ரபத்யநுஷ்டானத்தை அத்யந்த பாரதந்த்ரியமென்றும், வழங்குவார்கள்.

பல பாரதந்த்ரியமும் இரண்டுவகையாயிருக்கும். தன்னுடைய போகம் அப்ரதாநமாகவும், ஈசுவரனுடைய போகத்தைப் பிரதானமாகவுங் கொள்ளுகை கேவல பலபாரதந்த்ரியமென்றும், ஈசுவரா

(அ) பணிப்பொன்போ லிருக்கையாவது:- தட்டான்கைப் பட்டுப் பணிசெய்யப்படுகிற பொன்னானது அவனுக்கு அது சேஷமில்லாமலிருந்தாலும், அவன் அதனை உருக்கவும், தட்டவும், நீட்டவும், ஆக்கவும், அழிக்கவும் ப்ரவ்ருத்திக்குமளவில் அது நெகிழ்வதும், வளைவதும், நிமிர்வதும், நீள்வதும், ஆவதும், அழிவதுமாகி ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகளில் ஸ்வாதீனதையின்றி அவன் வசப்பட்டிருப்பது போலே, சேதனனும் தன் ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகளில் தனக்கு ஸ்வாதீனதையின்றி ஸர்வேசுவரனிஷ்டப்படி ஆக்கவும், அழிக்கவும் வசப்பட்டிருக்கை. ஆகவே, ஸ்திதி ப்ரயுக்தமான பராதீனதையே சேஷத்வமென்றும், க்ருதிப்ரயுக்தமான பராதீனதையே பாரதந்த்ரியமென்றுங் கண்டுகொள்வது. பகவத்ஸம்பந்தமான சேஷத்வ பாரதந்த்ரியங்களிரண்டும் சேர்ந்தேயிருக்குமாகையால் அவற்றைத் தனித்தனி பிரித்துணர்ந்துகொள்ளும்படி இவ்வுதாரணங்கள் காட்டப்பட்டன. இன்னும், அக்நிசேஷமான தூமம் அக்நிபாரதந்த்ரமாகாமல் வாயுபாரதந்த்ரமாயிருப்பதுகொண்டும் சேஷத்வ, பாரதந்த்ர்யங்களுக்குத் தனித்தனி ப்ரஸித்தியுண்டென்று கண்டுகொள்ளலாம்.

னுடைய முகோல்லாஸமே ப்ரயோஜனமாய் சைதந்யகார்யமாய்த் தனக்குவரும் போகத்தை ஈசுவரபோகத்திற்கு அதிசயத்தை விளைவிப்பதாக உத்தேசித்திருக்கை பாரதந்தரிய காஷ்டையென்றும், சொல்லுவர்கள்.

ஈசுவரபோகத்துக்கு அதிசயததை விளக்கையாவது-சேதனனுக்குப் போகமில்லாமல் அசித்துப்போலே பாதந்த்ரனாயிருந்தால் பாஞ்சாலிகாபரிஷ்வங்கம்போலே ஈசுவரனுக்கு போகம் ரஸிக்காதாகையால் இவனுக்கு போகம் உண்டாகும் பக்ஷத்தில் அவனுக்கு போகம் ரஸிக்கும்படியாயிருக்கை. புஷ்பத்திற்குப் பரிமளம் போலேயும் ரத்நத்திற்கு ஒளிபோலேயும் இவனுடைய போகம் பரார்த்தமாயிருக்கும். இந்த அர்த்தம் திருமந்த்ரத்தில் வ்யக்தசதுர்த்தியோடுகூடின நம:சப்தத்திலும் த்வயத்தில் உத்தரவாக்யத்தில் நம: சப்தத்திலும் "தனக்கேயாகவெனைக் கொள்ளவேணு" மென்கிற ஆழ்வார் திவ்ய ஸூக்தியிலும் "மற்ற நங்காமங்கள் மாற்று" என்கிற ஆண்டாள் திவ்ய ஸூக்தியிலும் கண்டு கொள்வது.

இந்த அர்த்தத்தை வேதாந்ததேசிகன் (க) "புங்க்தே ஸ்வபோகமகிலம் பதிபோகசேஷம்" என்று அருளிச்செய்திருக்கிறார்.

ஆசார்யஹ்ருதயத்திலும் "முற்பாடர்க்கு க்ரியாங்கமான இரண்டும் செயல்தீர்ந்தார்வ்ருத்தியில் ஸ்வநிர்ப்பந்தமறுக்கும்" என்று அருளிச்செய்திருக்கிறார். அதாவது முற்பாடரான உபாயாந்தர நிஷ்டர்களுக்கு உபாஸனத்திற்கு அங்கங்களான சேஷத்வ பேர்க்த்ருத்வங்களிரண்டும் ஈசுவரனையே உபாயமாகப்பற்றி க்ருதக்ருத்யர்களாயிருக்கிற அதிகாரிகள் பண்ணுங்கைங்கர்யத்தில் தனக்கென்னப் பண்ணுகிற நிர்ப்பந்தத்தைப் போக்குமென்பதாம்.

ஜ்ஞானஸ்வரூபமாகையாவது தன்னுடைய ப்ரகாசத்தில் மற்றொன்றை யபேக்ஷியாமல் தானே ப்ரகாசிக்கை.

ஜ்ஞானா: ச்ரயமாகையாவது நான் அறிகிறேன் என்கிற ப்ரதீதியாலே ஜ்ஞானத்துக்கு இருப்பிடமாயிருக்கை. இவையிரண்டும் ஸ்வரூப நிருபகங்கள்.

(க) இ-ள்:- பர்த்தாவான ஸர்வேசுவரனுடைய போகத்துக்கு அதிசயத்தை விளைப்பதான தன்னுடைய போகத்தை அநுபவிக்கிறாள் என்பதாம்.

இவன் ஜ்ஞாநாச்ரயனாகையாலே அதடியாகவரும் கர்த்ருத்வமும் ஆத்மாவுக்கு ஸ்வரூபம். கர்த்ருத்வமாவது ஒருவஸ்துவை உள்ளபடியே யறிந்து அதையடையவேணுமென்கிற இச்சையுண்டாகி அதனையடைய முயலுகை. இந்த ஜ்ஞாநேச்சாக்ருதிகள் ஜ்ஞானத்தினுடைய அவஸ்தா விசேஷங்களாகையாலே ஜ்ஞாநாச்ரயமாயிருக்கையாகிற ஜ்ஞாத்ருத்வத்திலடங்கும்.

இந்த கர்த்ருத்வம் (ய) "பராத்துதச்ச்ருதே:" என்கிற ஸூத்ரத்தின்படி ஸர்வேசுவராதீனம் (யக) அந்த கர்த்ருத்வம் ஈசுவராதீனமாயிருக்கையாவது "ஆதாவீச் வரதத்யைவ" என்கிற சுலோகத்தின்படி ஸ்ருஷ்டி காலத்தில் கரணகளேபரங்களைக் கொடுத்து ஜ்ஞானசக்தி ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி சக்திகளையுங் கொடுத்து சேதனனுடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் தான் உதாஸீனனாயும் த்விதீயப்ரவ்ருத்தியில் அநுமந்தாவாயுமிருக்கை.

இதுநிற்க இந்த சேதனன் பத்ததசையில் ப்ருக்ருதிஸம்பந்தமுள்ளவனாயிருப்பதால் அந்த ப்ரக்ருதியினுடைய குணங்களான ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களுடைய ஸம்பந்தத்தால் வருமதான கர்த்ருத்வம் ஔபாதிகம். இந்த அர்த்தம் "ப்ரக்ருதே: க்ரியமாணநி குணை: கர்மாணிசர்வச: அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே" என்கிற சுலோகத்தால் ப்ரக்ருதியினுடைய குணங்களினுடைய சேர்க்கையாலே பண்ணப்படுகிற கர்மாக்களை தானே செய்கிறதாக நினைக்கிறான் என்று சொல்லப்பட்டிருப்பது காண்க.

இப்படியில்லாமல், பகவத்கடாக்ஷ விசேஷத்தினாலே நிஷ்க்ருஷ்டஸத்வம் தலையெடுத்து பகவந்முகோல்லாஸமே ப்ரயோஜநமாகச் செய்யப்படுகிற வ்யாபாரங்களில் ஏற்படுகிற கர்த்ருத்வம் மோக்ஷதசையிலும் அநுவ்ருத்தமாகையால் ஸ்வாபாவிகமாகும். கீழ்ச்சொல்லிய கர்த்ருத்வம் ப்ரக்ருதிஸம்பந்தத்தைப்பற்றி வருமதாய் மோக்ஷதசையில் மாறுதலால் வந்தேறியாகும்.

(ய) இதன் பொருள் தத்-அந்த கர்த்ருத்வமானது. பராத்-ஈசுவரனாலே வருகிறது. ச்ருதே:-வேதத்தினால் சொல்லப்படுகிறது.

(யக) இதனுடைய விஸ்த்ருதமான நிருபணம் ஸ்ரீ. உ. வே. தேசிகவாதாசார்யரெழுதிய விசிஷ்டாத்வைதம் என்கிற விஷயத்திலிருப்பதால் அங்கு பார்த்துக்கொள்ளத்தக்கது.

ஆதலால் மிச்ரஸத்வத்தால் ஏற்படுகிற உபாயபுத்தியாலனுஷ்டிக்கப்படுகிற பக்தி ப்ரபத்திகளில், கர்த்ருத்வம் ஔபாதிகம். இப்படியன்றிக்கே ஸ்வயம் ப்ரயோஜனமான பகவன் முகோல்லாஸத்தை உத்தேசித்துச் செய்யப்படுகிற பக்தி ப்ரபத்திகளில் கர்த்ருத்வம் நிஷ்க்ருஷ்டஸத்வகார்யமாகையால் ஸ்வாபாவிகம். இந்த அர்த்தம் "இவன் பாசுரம் கேட்டவாறே திருவுள்ளமுகக்கும்" என்கிற லோகதேசிகன் ஸூக்தியால் வ்யக்தமாம். அதாவது தாயானவள் தன்னாலே போஷிக்கப்படுகிற ப்ரஜைக்கு அந்த போஷணத்தின் பொருட்டு ஆகாரம் கொடுப்பதில் ஒரு ஸாதனத்தையும் அபேக்ஷியாமலிருக்கச் செய்தேயும் அந்த ப்ரஜையானது முந்தி ஒருரோக விசேஷத்தினால் ஆகாரத்திலிச்சையில்லாமலிருந்து பின்பு அந்தரோகம்தீர்ந்து ஆகாரத்தை யபேக்ஷித்துச் சொல்லுகிறவார்த்தை தாயினுகப்புக்குக் காரணமாவது போலுமென்பதாம்.

ஆகையால் ஈசுவரனும் அப்படியே இவனுக்குப் புருஷார்த்தத்தைக் கொடுப்பதில் உத்யுக்தனாயிருக்கச் செய்தேயும் ஸம்ஸாரமாகிற பெரிய ரோகத்தினால் அந்த புருஷார்த்தத்தில் இச்சையில்லாமலிருந்து மறுபடி ஈசுவரனுடைய கடாக்ஷமூலமாக யாத்ருச்சிக ஸுக்ருதமடியாகப் புருஷார்த்தத்திலிச்சை பிறந்து புருஷார்த்தத்தையபேக்ஷித்து ஈசுவரனைக்கேட்குமது ஈசுவரனுக்கு உகப்பாகையாலே அந்த சேதனன் கேட்குமதே பக்தி ப்ரபத்திகளாகையால் இந்த பக்திப்ரபத்திகள் கைங்கர்ய ரூபமாய் அநுஷ்டிக்கப்பட்டிருந்தபோதிலும் ஈசுவரன் பலப்ரதானம் பண்ணுகைக்கு ப்ரயோஜகங்களாக ஏற்படுகின்றன. அதைப்பற்றியே பக்திப்ரபத்திகள் வ்யாஜஹேதுக்களாக நம்முடைய ஆசார்யர்களால் வ்யவஹரிக்கப்படுகின்றன. அப்படியிருக்க பக்திப்ரபத்திகளை உபாயமாகச் சொல்லுவது போஜனத்துக்குப் பசிபோல பக்தி பகவதனுபவத்துக்கு சாதனமான அபினிவேச ரூபமாகையாலும், ப்ரபத்தி சேதனனுடைய அநந்ய சரணத்வரூபமான ஸ்வரூபத்தினுடைய ஜ்ஞானகார்யமாய்வந்து ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞானமாயிருக்கையாலும் ஸங்கதம். இன்னும் மற்ற விஷயங்கள் ஹிதநிரூபணத்தில் ப்ரஸ்தாவிக்கப்படும்.

போக்த்ருத்வமும், ஸ்வார்த்தமென்றும் பரார்த்தமென்றும் இரண்டுவகையாக விருக்கும். ஸ்வார்த்த போக்த்ருத்வமாவது தன்னுடைய போகத்தையே ப்ரதாநோத்தேச்யமாக நினைத்திருக்கை. பரார்த்த போக்த்ருத்வமாவது தன்னுடைய போகத்தை அப்ரதாநோத்தேச்யமாக நினைத்து ஈசுவரபோகத்தை ப்ரதாநோத்தேச்யமாகக் கொள்கை. அங்ஙனமன்றிக்கே தன்னுடைய போகத்தை ஈசுவர போகத்துக்கு அதிசயத்தை விளைப்பதாக உத்தேசித்திருக்கையுமாம். இந்த விஷயம் கீழ்நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

(தொடரும்.)

(உபயவேதாந்த வித்வான்,)
சிங்கராசார்யர், காரப்பங்காடு.

வீதஹவ்யர்.

சென்ற வைகாசி மாதத்து ஐந்தாம் பகுதியில் காரப்பங்காடு உபயவேதாந்த வித்வான் சிங்கப்பெருமாள் ஸ்வாமியால் லாதிக்கப் பெற்ற "ராமாநுஜ ஸித்தாந்தப்ரகாசிகை'' என்ற விஷய ஆராய்ச்சியில் "விசுவாமித்ர விஷயத்தில் சருவித்யாஸத்தைக் காரணமாகச் சொன்னாலும், ருஷிவாக்யத்தாலே ப்ராஹ்மண்யத்தையடைந்த வீதஹவ்யர் விஷயத்தில் வேறுகாரணஞ் சொல்லமுடியாது'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதலால் இங்கு வீதஹவ்யரின் வரலாறு எழுதப்படுகிறது.

விசுவாமித்ரர் முன் க்ஷத்திரியராயிருந்து பின் பிராஹ்மணராய் விளங்கியதுபோல் இந்த வீதஹவ்யரும் க்ஷத்திரியராயிருந்து பின் ப்ருகுமஹருஷியின் வாக்யத்தால் ப்ராஹ்மணரானவர். இச்சரித்திரம் எல்லாத்தருமங்களையறிந்த பீஷ்மாசாரியரால் தருமபுத்திரருக்குச் சொல்லப்பட்டதாம்.

பெருமையுடைய மனுவுக்குச் சர்யாதியென்று பெயருடைய ஒரு புத்ரன் இருந்தான். இவன் தர்மகாரியங்களில் மிகவும் ஊக்கமுடையவன், இவனுடைய வம்சத்தில் ஹைஹயன் என்பவனுகிய வீதஹவ்யன் தாலஜங்கன் என்னும் இரண்டு அரசர்கள்

தோன்றினார்கள். அவர்கள் வத்ஸதேசத்தை ஆண்டுவந்தார்கள். அவ்விருவரில் வீதஹவ்யனென்ற அரசனுக்கு மனைவியர் பதின்மர் இருந்தனர். அம்மனைவியரிடத்தில் தேகவலிமையும் சூரத்தன்மையும், பெருமையும், ஒருங்கமையப்பெற்ற நூறுபுதல்வர் தோன்றினர். அவர்கள் உருவத்தாலும் ஒரே தன்மையராய் விளங்கினர்கள். அவர்கள் வேதம் தனுர்வேத முதலியவற்றைப் பயின்று பாண்டித்யமுடையவர்களாயும் இருந்தார்கள்.

அக்காலத்தில் காசிதேசத்தை ஹர்யச்வன் என்னும் பெயருடைய ஒரு அரசன் ஆண்டுவந்தான். இவனை ஜெயிக்கவேண்டுமென்று வீதஹவ்யரின் புதல்வர்கள் எண்ணங்கொண்டு காசிதேசத்தை அணுகி கங்கைக்கும் யமுனைக்கும் இடையிலுள்ள இடத்தில் பெரும் போர்விளைத்து அப்போரில்இந்த ஹர்யச்வனைக் கொன்றனர். பின் அவ்வீரர்கள் வத்ஸதேசத்தின இராஜதானியாகிய அழகமைந்த சிறந்த ஓரிடத்திற்கு திரும்பிச்சென்றனர். அதன்பிறகு தெய்வத்தன்மைபோன்ற தேஜஸ் உடையவனும் தர்மமே ஓர் உருக்கொண்டு வந்தது போன்றவனுமாகிய ஹர்யச்வன் மைந்தனை ஸுதேவன் காசிதேசத்திற்கு அதிபதியாகவிருந்து அரசாண்டுவந்தான். இந்த ஸுதேவனையும் வீதஹவ்யரின் புதல்வர்கள் போருக்கழைத்து போரில் வென்றனர். பின்பு காசிதேசத்திற்கு ஸுதேவன் புதல்வனை திவோதாஸன் பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்று அரசாண்டு வந்தான்.

அத் திவோதாஸன் சிறந்த பராக்ரமுள்ளவனு யிருந்தான் ஆயினும் வீதஹவ்யரின் புதல்வர்கள் மனஉறுதியையும் வீரத்தன்மையையும் அறிந்து, தக்கதோரிடத்தில் இராஜதானியமைத்து அரசுசெலுத்த எண்ணங்கொண்டு இந்த்ரனது கட்டளையினால் கோமதிநதியின் தென்கரையும், கங்கையின் வடகரையுமான, ஓரிடத்தில் அமராவதிக்கு ஒப்பாம் நகரை உண்டுபண்ணி, அங்கிருந்து அரசு செலுத்திவந்தான்.

அக்காலத்திலும் வீதஹவ்யரின் புதல்வர்கள் இவனை ஜெயிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு, சூழ்ந்து கொண்டார்கள். இதுகண்ட திவோதாஸன் கோபாவேசங்கொண்டு அவர்களோடு போர்புரிந்தான். இவ்விருதிறத்தாரின் போரைக்கண்டவர்கள் தேவாசுர யுத்தமோவென அஞ்சி நடுங்கினர். யுத்தமும் நாலு

தினங்கள்வரை நடைபெற்றது. அதனால் திவோதாஸனுடைய சைன்யங்களும், செல்வங்களும், குறைந்தன. இனி நம்மால்போர் செய்யமுடியாதென நினைத்து, திவோதாஸன் அந்நகரை விட்டுக் கடந்து சிறந்த ஜ்ஞானமுடைய பரத்வாஜரை சரணமாக அடைந்தான். பரத்வாஜர் இவனை நோக்கி நீ மிகவும் துக்கமுடையவனாய்க் காணப்படுகின்றாய்; நீ இங்கு வந்த காரணம் யாது? என்று வினவினர். அதற்கு திவோதாஸன் ஸ்வாமி! வீதஹவ்யரின் புதல்வர்களால் எனது குலமே நாசமாய்விட்டது; யானும் இப்பொழுது அவர்களுடைய போருக்காற்றாது உம்மையே தஞ்சமாகப் பற்றினேன்; என் வம்சத்தில் எஞ்சி நின்றவன் யான் ஒருவனே, இனி என்னைக் காப்பாற்ற வேண்டுமென்றான்.

அப்பொழுது பரத்வாஜர் இவனுக்கு அபயப்ரதானம் பண்ணி வீதஹவ்யரின் புதல்வரை அழிக்கத்தக்க பலம்வாய்ந்த ஒரு புதல்வனை இவனுக்குண்டுபண்ணிக் கொடுக்கவேண்டுமென்று, புத்ரகாமேஷ்டியைச் செய்தார்.

அதனால் அந்தத் திவோதாஸனுக்கு ப்ரதர்த்தனன் என்னும் ஓர் புத்ரன் பிறந்தான். அவன் இளம்பிராயத்திலே தனுர்வேத முதலிய வித்தைகளைப் பயின்று வல்லபனானான். சக்தியுடையவனாய்த் தோற்றுவிக்கக்கருதிய பரத்வாஜரின் புத்திரகாமேஷ்டியால் பிறந்தவனாதலால் ப்ரதர்த்தனன் 13ம் பிராயம் வந்தவாறே உலகத்திலுள்ள சக்திகளெல்லாம் அவன் தேகத்தில் குடிகொண்டனவோ வென்று யாவரும் வியக்கும்படி தேகவலியுடையவனாய் விளங்கினான். இவன் இங்ஙனமிருப்பதைக்கண்ட திவோதாஸன் மகிழ்வுற்று நம் பகைவராகிய வீதஹவ்யரின் புதல்வர்கள் இன்றே மாண்டொழிந்தார்களென, அச்சமற்றுத் தன் புதல்வனாகிய ப்ரதர்த்தனனுக்கு இளவரசுப்பட்டம் சூட்டினான்.

அதன் பின் ப்ரதர்த்தனன் வீதஹவ்யரின் புதல்வர்களை ஜெயிப்பதற்கு எண்ணங்கொண்டு ரதமீதேறி அவர்களிருக்கும் நாட்டை அணுகி அவர்களைப் போருக்கழைத்து, அஸ்திர சஸ்திரங்களை மழைமாரிபோல் பொழிந்து, வீதஹவ்ய அரசரின் புதல்வர்களைக்கொன்று குவித்தான். பின் வீதஹவ்யர் ப்ரதர்த்தனனுடைய வலிமையைக்கண்டு இனி நாம் இங்கிருக்கலாகாதென்று ப்ருகுமஹருஷியின் ஆச்ரமத்தையடைந்து அவரைத் தஞ்சமாகப்

பற்றினார். ப்ருகுமஹருஷி அவ் வீதஹவ்யருக்கு அபயப்ரதானம் பண்ணி தம் சிஷ்யர்கள் இருக்கும் மத்தியில் ஓராசனமிட்டு இதில் அமரக்கடவாயென்று பணித்தார்.

ப்ரதர்த்தனன் இவ் வீதஹவ்யரைக் கொல்லவேண்டுமென்று பின்தொடர்ந்து அவ்வாச்ரமத்தை யடைந்தான். ப்ருகுமஹருஷி யானவர் ப்ரதர்த்தராஜனை நோக்கி ஓய் ராஜனே! நீ இங்குவந்த காரணம் யாது? என்று வினவ ப்ரதர்த்தனன் வீதஹவ்யன் புதல்வர்களால் என்குல முழுதும் நாசமடைந்தன, இராஜ்ய சம்பத்துக்களும், கொள்ளை கொள்ளப்பட்டன, அதனால் யான் அவன் புதல்வரனைவரையுங் கொன்றேன். இவ் வீதஹவ்யனையுங் கொன்று என் பிதாவின் கட்டளையை நிறைவேற்றுவேன்; அதனால் இங்குவந்த வீதஹவ்யனை விட்டுவிடவேண்டு மென்றான்.

அதற்கு ப்ருகுமஹருஷி தன்னைத்தஞ்சமாகப்பற்றிய வீதஹவ்யரைக் காப்பற்றக் கருணைகொண்டு எமது ஆச்ரமத்தில் க்ஷத்திரியன் ஒருவனுமில்லையே இங்குள்ளாரனைவரும் பிராஹ்மணரே நீ இவ்விடத்தைப் பரிசோதித்துப்பார்க்க வேண்டுமானால் அவ்வாறே செய்வாயென்றார்.

"கலைவல்சீர்மைந்தனே கருதுநின்பகை
யிலையிவனுளவெனிலினிக்கொண்டேகெனத்
தலையளிபுரிந்தனன்சார்ந்தசூழலுள்
கொலையயில்வேலினன்குறித்துநோக்கினான்"

என்றபடி ப்ரதர்த்தனன் ஆராய்ந்து பார்த்தான். ப்ருகுமஹருஷியின் அநுக்ரஹத்தால் வீதஹவ்யர் பிராஹ்மணராய் விட்டார். அதனால் இவன் கண்ணுக்கு வீதஹவ்யர் தோன்றவில்லை அதன்பின்

"ஏந்தலும்முனிவரனினைப்பிலெண்ணறு
சாந்தவேதியரொடுசார்ந்துவைகலும்
ஆய்ந்துணர்ந்தந்தணனடியிற்றாழ்ந்துபோய்
சேந்தகண்மைந்தனும்நகரிற்சேர்ந்தனன்"

என்றபடி ப்ரதர்த்தனன் ப்ருகுமஹருஷியின் வாக்யத்தால் வீதஹவ்யர் பிராஹ்மணராய் விட்டதையறிந்து, ப்ருகுமஹிருஷியை நமஸ்கரித்து, அடியேனுக்கு க்ஷேமமுண்டாகும்படி அநுக்ரஹிக்கவேண்டுமென வேண்டினன். அவரும் ஆசிகூறி விடையளிக்கத் தன் நகரைச் சேர்ந்தான்.

தீண்டாமை.

— :O: —

(93-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, இத்தீண்டாமை வருணாசிரம பேதங்களாலும், ஜாதி குல சந்தர்ப்ப பேதங்களாலும், தேசகால பேதங்களாலும், பல வகைப்படும். அவற்றுள் வருணத்தால்வரும் தீண்டாமையாவது-உயர்ந்த வருணத்திற்பிறந்தவரும், இழிந்த வருணத்திற் பிறந்தவரும், ஒருவரை ஒருவர் தீண்டாதிருத்தல். இங்கு ஒருவரை ஒருவர் தீண்டாதிருத்தல் அவரவர்களுக்குரிய தருமமாம். இதனால் ஒருவருக் குயர்வும், மற்றொருவருக்குத்தாழ்வும் குறிப்பிட்டதில்லை. உயர்ந்த வருணத்திற் பிறந்தவர்களிருக்கும் அக்ரகாரத்திற்குள் இழிந்தோர்கள் புகுதலாகாதென்றதினால், இவர்கள் அவர்களால் இழிக்கப்பட்டவராகாரோ வெனின்? உயர்ந்த வருணத்தார்களும், அவ்வாறே இழிந்த வருணத்தாருறையும் சேரியிற் புகாதிருப்பதுபற்றி அவர்கள் இழிக்கப்படாமையால் தீண்டத்தகாதவர்கள் தாமிருக்குமிடத்திற் பிரவேசிக்காதிருப்பது அவர்களுக்குரிய தருமமெனக் கருதுவார்கள்; அதனால் உயர்ந்த வருணத்தவரால் இவர்கள் இழிக்கப்பட்டவராகார்.

வசிஷ்டமாமுனிவர் எல்லோரிடத்திலுங் கருணையுடையவர்; எவரிடத்திலும், த்வேஷம் சிறிதும் பாராட்டாதவர்; பக்ஷபாதமற்றவர்; என்றாலும் அவர் யாககாரியத்திற்கு இழிந்தோர்களைச் சேர்த்துக்கொள்ளமாட்டார் என்றால்; இழிந்தோர்கள் வஸிஷ்டமுனிவரால் நிந்திக்கப்பட்டார்களென்றும், வஸிஷ்டர் த்வேஷமும் பக்ஷபாதமுமுடையவரென்றும், கருதலாகாது. அக்னி காரியத்திற்கு இழிந்தோர்களைச் சேர்ப்பது தருமமில்லை. ஆகையால் வஸிஷ்டர் அவர்களை யாககார்யத்தில் சேர்க்காதிருப்பது அவருக்குரிய தருமமாம். அக்காரியத்தில் இழிந்தோர் சேராதிருப்பது இவர்களுக்குரிய தருமமாம். ஆக இருவருக்கும் விலக்கியதொழிதலாகிய தருமம் சித்திபெற்றதாம்; அதுபோல் இங்கு இவ்விருவருக்கும் விலக்கிய தொழிதலாகிய தருமமே ஸித்திக்கிறது.

இவ்விருவருணத்தாரும் ஒருவரை ஒருவர் தீண்டலாகாதென்பதை அவரவர் தங்களுக்குள் ஆராய்ந்து பார்க்குமிடத்து அவ்வாராய்ச்சியில் தீண்டாமை நமக்குரிய ஸ்வ தர்மமாம்; என்பதை அமைத்து நோக்கவேண்டும்; அப்பொழுது அவர்கள் உணர்விற்கு

இது த்வேஷமாகத் தோன்றுது. அவ்வாறு பார்க்காத குறைவி னுலன்றே! உயர்வு தாழ்வென்கிற த்வேஷவுணர்வுண்டாகிறது. ஆக த்வேஷ புத்தியை மாற்றுவதற்கு மருந்தாய் நிற்பது தருமமென்ற புத்தி பிறப்பதேயாம். த்வேஷமே உலகில் மேலிடுமாகில், தருமம் அழியும். அஃதழியுமாகில் உலகம் நடைபெறுது. இதுபற்றியே கண்ணன் கீதையில், வருணாச்சிரம தருமங்களெல்லாம் அழிந்து உலகம் நடைபெறுது வருந்துகின்ற நிலைமையில் அவற்றை மறுமுறையும் ஸ்தாபிப்பதற்காக உலகில் நான்வந்து பிறக்கிறேனென்று அருளிச்செய்தான். இதனுல் இத்தருமம் பகவதாஜ்ஞாரூபமானதென்பது விளங்கும். இங்ஙனம் பகவதாஜ்ஞாரூபமான தருமத்தை ஒவ்வொருவரும் கைப்பற்றுதற்கே விரும்ப வேண்டும். பொருளிற் கண்ணுடையான் ஒருவன் தன்னிடத்துள்ள பொருளை இழப்பானுகில் அவன் எவ்வளவு மனச்சஞ்லமும் கஷ்டமுமடைவானே அதுபோல தமக்குரிய தருமத்தை இழப்பதிலும் துக்கமடையத் தடையில்லை.

ஒருவரை ஒருவர் தீண்டலாகாதென்று வரையறுத் துணர்த்திய இது தருமாசரணகாலங்களில் நிகழத்தக்கது. அர்த்தார்ஜன காலங்களில் இவ்விருவரும் ஒருவரை ஒருவர் தீண்டலாகாதென்ற விலக்கு உண்டாகிறதில்லை. இதை, தருமக்கோர்ட்டுகளிலும், வைத்திய சாலைகளிலும், போலீஸ் ஸ்டேஷன்களிலும், ரிஜிஸ்தர் ஆபீஸ்களிலும், வியாபார சாலைகளிலும், லௌகிக பாடசாலைகளிலும், ரெயில்வே பிரயாணங்களிலும், விலகி நிற்பாரும், விலகுவாருமில்லாமல் விரவிக்கொண்டிருப்பதால் அறியலாம்.

இவ்வுண்மை யறியாத பொருள்நோக்குடைய நவீனர்கள், தீண்டாமை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்றும், எல்லோரும் ஒன்ருய்விட வேண்டுமென்றும் வாதாடுகிறுர்கள். அவர்கள் வாதாடுகிறபடி தீண்டாமை என்பதை ஒழித்து எல்லோரும் ஒன்ருய்விடில் அதில் ஏதாவது ஒருநன்மையுண்டோவென்று ஆராய்ந்தால், அதனுல் தருமத்தை அழித்துக்கொள்வதாகிய ஓர் அநர்த்தம் ஏற்படுகிறதேயன்றி, பிரத்யக்ஷமாக ஒரு பலவிருத்தியுமுண்டாகிறதில்லை.

உலகத்தை நிலையுறச்செய்வது பொருளாதலால், அப்பொருளை விர்த்தி செய்வதன் பொருட்டுத் தருமத்தையழித்தாலும் குற்றமாகாது என்று நவீனர்கள் கருதுவார்களோ வென்னின்? தருமம்

என்பதொன்று அழியுமாகில் அதுகாரணமாக வருகின்ற பொருள், இன்பங்களையும் உலகம் இழந்துவிடும். தருமம் ஒன்றே மக்கள் இன்னபடி ஒழுகவேண்டுமென்று அவர்களுக்கு வரம்பிட்டுக் கொடுத்தது. அஃதில்லையேல் ஒழுக்கமழியும். அஃதழிய அதை ஆதாரமாகக் கொண்ட பொருள் கெடும். அதுகெட அது காரணமாகவரும் இன்பம் ஒழியும். ஆகத்தருமம் ஒன்றினாலே ஏனைய இரண்டு புருஷார்த்தங்களும் நிலைபெறவேண்டும். இதனால் உலகிற்கு ஆதாரமாய் நிற்பது தருமமென்பது பெறப்படும்.

சீதாபிராட்டி இராவணனை நோக்கி புத்திகூறுமிடத்து

"பூவிலோனாதியாகப்புலன்கள்போநெறியிற்போகாத்
தேவரோவுணர்தாமோநிலைநின்று வினையிற்றீர்ந்தார்
ஏவலெவ்வுலகுஞ்செய்யச்செல்வநிற்கிசைந்தவென்றால்
பாவமோர்முன்னீசெய்ததருமமோதெரியப்பாராய்"

என்று இவ்வாறு கூறினாள். இதனாலும், பொருளும் தருமத்தாலே நிலைபெறவேண்டுமென்பது விளங்கும்.

தீண்டாமையைக் கைக்கொள்ளுதல் முன்னேற்ற மடைதற்குப் பெருந்தடையாயிருக்கும் என்று நவீனர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அதைப்பற்றிப் பின் ஆராய்வோம். இப்பொழுது அவர்களுடைய நிலைமையைச்சிறிது ஆராயவேண்டியது இன்றியமையாததாதலால் அதைப்பற்றியும் ஆராய்வோம்.

நவீனர்கள், வைதீகதரும சாஸ்திரங்களை ஒருசிலர் அறிய விரும்பினாலும் ஆங்கிலேயர்கள் தமது சொந்த அபிப்பிராயத்தையும் கலந்தெழுதிய ஆங்கிலப்புத்தகங்களையே படித்துத் தெரிவதால் அவர்கள் நம்முடைய சாஸ்திர தாத்பரியங்களை உள்ளபடியறிய மாட்டாதவர்களாயிருக்கிறார்கள். அன்றியும் ஆங்கில மக்களோடு கூடிக்குலாவி அவர்கள் நூலை முற்றப்பயின்று தற்பாராய் விடுகிறார்கள். ஆதலால் அவர்கள் உணர்விற்கு ஆங்கில சமயாசாரமும், ஆங்கில தேசாசாரமும், ஆங்கிலமக்கள் ஆசாரமும் விஷயமாகின்றன. அவ்வுணர்வு கருவியாகக்கொண்டு உபதேசிக்கத் தொடங்குகிறார்கள். அது தொன்றுதொட்டு வைதீக சமயாசாரங்களைக் கையாண்டுவந்த இத்தேசத்திற்கு விபரீதமாகக் காணப்படுகிறது. அவர்கள் உபதேசம் ஆங்கிலதேசம் ஒன்றுக்கே உரியதாமென்று அவர்களும் அறிந்துகொள்ளவேண்டும். அவர்கள் இத்

தேசத்தார்க்கு ஒழுக்கநடைகளை உபதேசிப்பதற்கு விரும்புவரேல் வைதீக சமயங்களில் அடிப்பட்ட சான்றோரிடத்தில் முறைப்பட்டுக்கேட்டு வைதீக சமயாசாரங்களை நன்குதெரிந்துகொண்டு அதன்பின் உபதேசிக்கவேண்டும். மேலும், அவர்கள் உபதேசிப்பதெல்லாம் பொருளைப்பற்றியனவே, தருமத்தைப் பற்றியதன்று. பொருளைப்பற்றியவளவில் அவர்கள் கொள்கையின்படி இவ்வுலகு தீண்டாமையை விலக்கியிருப்பதை முற்கூறியதால் அறிக.

இத்தீண்டாமையைக் கையாள்வதால் இழிந்த வருணத்தவர்கள் முன்னேற்ற மடைவதற்குத் தடையாயிருக்கிறதென்றுஞ் சொல்லமுடியாது. அதைக்குறித்தும் இங்கு ஆராய்வோம்.

நம்மால், இவ்வளவுகாலமென்று கணித்து அறியமுடியாத மிகப்பலகாலமாக இத்தீண்டாமையை இத்தேசம் கையாண்டு வந்திருக்கிறது. அதனால் இழிந்தோர்கள் பொருள் முதலியவற்றால் முன்னேற்றமடையவில்லை என்று சொல்லமுடியாது. பொருள் அவர்களிடத்திற் போய்ச்சேரும் தகுதியையுடையது.

"கூத்தாட்டவைக்குழாத்தற்றேபெருஞ்செல்வம்
போக்குமதுவிளிந்தற்று"

என்றதாலும், நல்ல ஊழுடையாரிடத்திலே பொருள்வந்துசேரும் என்பதறியலாம். இழிந்தோரிடத்தும் நல்லஊழ் இருக்குமாகில் அவர்களிடத்திலும் பொருள் தன்னடைவே போய்ச்சேரும்! "பொருளல்லவரைப் பொருளாகச்செய்யும் பொருளல்லதில்லை பொருள்" "பொருள்பூரியார்கண்ணுமுள" என்பதனாலுமறிக. வறியராதற்கு பூர்வ ஜன்மாந்திர ஸுக்ருதமின்மை காரணமாமேயன்றி இத்தீண்டாமை காரணமாகமாட்டாது.

"இலர்பலராகியகாரணம்நோற்பார்
சிலர்பலர்நோலாதார்" என்றதனாலுமறிக.

அக்காலத்தில் சத்தியவந்தனாகிய அரிச்சந்திர மகாராஜனை விலைகொடுத்து வாங்கியவன் ஒரு தீண்டாதவனென்றால், அவன் எவ்வளவு பொருள் படைத்தவனாயிருக்கவேண்டும். இதனால், தீண்டாமையைக் கொள்வதால் அவர்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையுண்டாகும் என்று ஒருபொழுதும் சொல்லமுடியாது.

இக்காலத்திலும், இதரவருணத்தார்கள் பொருளால், பலர் முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் உயர்ந்த வருணத்தாரும் கையாளாக இருப்பதைக் காண்கிறோம். இதனாலும், பொருள் சம்மந்தப்பட்டமட்டில் ஒருவருக்கொருவர் அன்னியோன்யக்கலப்பு இயல்பாகவே இருந்துகொண்டே இருக்கிறது.

இனி, தேவாலயங்களில் எல்லோரும் புகுந்து ஸ்வாமியைத் தொழலாம் என்பதை ஆராய்வோம்.

தேவாலயங்களில் தெய்வங்கள் மந்த்ர ஸம்ஸ்காரத்தால் பிரதிஷ்டிப்பிக்கப் பட்டிருக்கின்றன, ஆலயங்களும், கொர்ப்பகிருஹம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம், பிரகார முதலிய பல வகைகளோடு ஆக்கப்பட்டிருக்கின்றன. இதனால், மந்த்ர ஸம்ஸ்காரத்தால் பிரதிஷ்டிக்கப்பட்ட தெய்வத்திற்கும் சில நியம விதிகளுண்டு. அத்தெய்வத்திற்குப் பாதுகாவலாகக்கட்டப்பட்டிருக்கிற, கொர்ப்பக்கிருஹம் முதலிய விடங்களுக்கும் சில நியமவிதிகளுண்டு. அவையாவன:-தெய்வத்தைத் தொட்டுப்பூஜை செய்தற்குரியார் சிலருளர்; கொர்ப்பக்கிருஹத்தளவும் போதற்குரியார் சிலருளர்; அர்த்தமண்டபத்தளவும் செல்லுதற்குரியார் சிலருளர்; மஹாமண்டபத்தளவும் அணுகுதற்குரியார் சிலருளர்; அவ்விடத்திற்குப்போவதற்கு உரிமையில்லார் சிலருளர்; இவ்வேறுபாடுகளிருக்கினும், தெய்வத்தைத் தொட்டுப்பூஜை செய்வார்; அப்பணிவிடையால் என்ன பயனையடைகிறார்களோ அப்பயனையே அண்மையில் நின்று தரிசிப்பவரும், சேய்மையில் நின்று தரிசிப்பவரும் ஆலயத்தினுட் புகாமல், விமானத்தைக்கண்டு தரிசிப்பவரும் அடைவார்கள். பலத்தில் பேதங்கிடையாது, மேற்கூறப்பட்ட நியமங்கள் ஜெகநாத முதலிய தேவாலயங்களிலில்லையே எனின்? அதின் விஷயத்தைப்பற்றிப்பின் தேசாசாரம் என்று குறிப்பிடுவதில் விளக்கப்படும். ஆலய வழிபாட்டிற்கு இந்நியமங்களெல்லாம் சிலர்கூடிக் கட்டுப்பாடான சிலநியமங்களை உண்டுபண்ணிக்கொண்டார்களோ வெனின்? தெய்வத்தைத்தொட்டுப் பூஜைசெய்யும் பிராஹ்மணவகுப்பைச் சேர்ந்தவர்களும், கொர்ப்பக்கிருஹத்தளவு செல்லலாமேயன்றி தெய்வத்தைத் தொடலாகாது. தொடுவார்களாகில், மறுபடியும் தெய்வத்தை ஸம்புரோக்ஷணை செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டுளது. இதனால், உயர்ந்த வகுப்பினருள்ளும் தீண்டாமை நியமமுண்டென்பது பெறப்படும். அதனால், கட்டுப்பாடாக ஏற்படுத்திக்கொண்டதென்று சொல்லமுடியாது.

தெய்வத்தைத் தொட்டுப் பூஜைசெய்தற்குரியார் சிலர் ஆலயத்தைவிட்டு வெளியேறியபிறகு மற்றப்பிராமணர்களுக்கும் அவர்களுக்கும் ஸஹபோஜனாதிகள் கிடையாது. அவர்களை இதனால், அவர்கள் ஒருவருக்கொருவர் உயர்ந்தவர்களென்றுஞ்சொல்ல முடியாது. பின்னையாதெனின்? இது பெரியோர்களால் கையாண்டு வருகிற தருமாசரணமென்றே கொள்ளவேண்டும். இப்படி பரஸ்பர விரோதமாயும், நம்மறிவுக்கு எவ்வகையாலும் எட்டக்கூடாததாயுமிருக்கிற ஒருதருமத்தை அவர்கள் கற்பித்துவைத்தால் அதை நாம் எவ்வாறு ஒப்புக்கொள்வதெனின்? அவர்கள் தம் யோக திருஷ்டியால் ஒவ்வொரு பொருள்களின் உண்மையையறிந்து ஒருகாரணம்பற்றியே பலவகையான பேதங்களை ஏற்படுத்தியிருப்பார்கள். அவை நமது சிற்றறிவுக்குப் புலனாகிறதில்லை. அதனால் அவர்களை ஒருகாரணம் பற்றாது ஏற்படுத்தினார்களென்று அவர்களிடத்திற் குற்றஞ்சொல்லுதற்குமுடியாது.

கண்ணபிரான் அருளிச்செய்தவற்றை அருச்சுனன் தன்னறிவுகொண்டு ஆராய்ந்துபார்த்தவிடத்து; அவன் நெஞ்சு தெளிவடையவில்லை. பின்பு கண்ணபிரான் அவனுக்கு ஞானக்கண்ணைக் கொடுத்துப்பார்க்கும்படி அநுக்கிரகித்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால், நம் சிற்றறிவுகொண்டு ஆராயுமிடத்து ஒன்றுந்தோற்றாதென்பது பெறப்படும்.

பூமியும் பொது; தெய்வமும் பொது; ஆகையால், எல்லோரும் ஆலயங்களிற் பிரவேசித்துத் தெய்வவழிபாடுகள் செய்யலாமெனின்? அவ்வாறு செய்வதால் தாங்கள் கருதிய பிரயோஜனம் ஏதேனும் அடைந்தவராகார்; சாஸ்திரத்தாலும் தூஷிக்கப்பட்டவராவார்; தங்கள் தருமத்தையும் அழித்துக்கொண்டவராவார்; இதனான் மூன்று வகையான குற்றத்திற் குள்ளாவாரேயன்றிப் பிறிதில்லை.

ஒவ்வொருவரும் விதிவிலக்கலாகிய தருமங்களுக்கு உட்பட்டு நடக்கவேண்டும். கட்டுப்படாதிருப்பரேல்; அவர்கள் கொடியவராகவே கருதப்படுவார்கள். இராவணன் விதிவிலக்கென்ற தருமமறியாதவனாய் காமவெறிகொண்டு சீதாபிராட்டியிடத்துச் சில வார்த்தைகளைக் கூறினான். அப்பொழுது பிராட்டி

"கடிக்கும்வல்லரவுங்கேட்கும்மந் திரங்களிக்கின்றாயை
அடிக்குமீதடாததென்றவேதுவோடறிவுகாட்டி
இடிக்குநரில்லையுள்ளாரெண்ணியதெண்ணியுன்னை
முடிக்குநரென்றபோதுமுடிவன்றிமுடிவதன்றே"

என்று அருளிச்செய்தாள். இதன்பொருள், தீண்டுகின்ற விஷத்தையுடைய கொடிய பாம்பும் மந்திரத்திற்குக் கட்டுப்படும். மதத்தினால் மகிழ்ச்சியடைகின்ற உனக்கு இதுநல்லது கெட்டது என்று ஏதுக்காட்டி இடித்துரைக்கும் பெரியோர்களில்லை. நீ கருதியதற்கிணங்கியிருக்கின்றவரோடு உறவுகொண்டவனாயிருக்கின்றாய் ஆதலால், இனி நீ முடிந்து விடுவாயேயன்றிப் பிறிதில்லை என்பதாம். இதனால், விதிவிலக்கலாகிய தருமங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்காவிடில் கொடியவராவாரென்றும்; விதிவிலக்கை மேற்கொண்டு ஒழுகும் ஒழுக்கமும், பெரியோர்களின் உபதேசத்தாலுண்டாக வேண்டுமென்றும், விளங்குகின்றன.

இத்தீண்டாமையால், அன்னியோன்யபாவம் குறைந்துவிடுகின்றதென்றுங் கருதலாகாது. இருவருக்கும் அன்யோன்யபாவம் ஹ்ருதயத்தால் எப்பொழுதும் உண்டு. நிற்க, கிராமாந்தரங்களில் குளங் கால் உடைப்புண்டாங்காலங்களில் எல்லோரும் அளவளாவிக்கொண்டு அக்கார்யத்தை நிறைவேற்றுகிறார்கள். மேலும் இவர்கள் நன்செய் முதலிய நிலங்கள் அவர்களால் உழுது செப்பஞ்செய்து பயிரிடப்படுகின்றன. பின் பலஸித்திகாலங்களில் அவற்றிலுண்டாகின்ற தான்யங்களை அவர்கள் கொடுக்கக் கொள்ளுகின்றார்கள். இன்னோரன்ன விடங்களில், இருவருக்கும் கொள்கொடையாகிய ஸம்பந்தமுண்டாகிறது. ஆக, இத்தீண்டாமையால் அன்யோன்யபாவங்குறைந்து விடுமென்றறியலாகாது.

இத்துணையும் கூறியவாற்றால், வருணபேதத்தாலுண்டாகும் தீண்டாமையைக் கைக்கொள்ளவேண்டுமென்பதும், இதனால் ஒருவரால் ஒருவர் இழிக்கப்பட்டவராகாரென்பதும், இதை அவரவர்கட்குரிய தருமமாகக் கொள்ளவேண்டுமென்பதும், இது பகவதாஜ்ஞாரூபமென்பதும், இதை இழக்கிற விஷயத்தில் யாவரும்வருந்தவேண்டுமென்பதும், உடீநம் தருமாசரணகாலங்களிலே இத்தீண்டாமையைக் கையாளுகிறதென்பதும், அர்த்தார்ஜனகாலங்களில் ஒழித்தே நிற்கிறதென்பதும், இத்தீண்டாமையால் பொருள் வரு

வாய் குறைந்துவிடாதென்பதும், அது முயற்சியாலும் ஊழினாலும் வரத்தக்கதென்பதும், இழிந்தோர்களும் பொருளினால் பெருஞ் சிறப்புடையவராய் விளங்குகின்றார்களென்பதும், ஆங்கிலமக்களால் அவர்தம் அறிவுக்கேற்றவாறு ஆராய்ந்துரைத்த அறிவு நூல்களை யும், அவர்தம் நூல்களையும், பயின்ற நவீனர்கள் உபதேசிக்கும் ஒழுக்கமுறைகள் இத்தேசத்திற்குரியதன்றென்பதும், தரும மென்பதொன் றில்லையானால், அதை ஆதாரமாகக்கொண்ட பொரு ளின்பங்களும் ஒழிந்துவிடுமென்பதும், ஆலயவழிபாடு நியமங்கள் இன்னதென்பதும், இந்நியமங்களெல்லாம் பெரியோர்களால் வகுக் கப்பட்டன என்பதும், ஆலயவழிபாட்டிற் குரிமையில்லாதவர்கள் அது செய்வதால் ஒரு பிரயோஜனமில்லை யென்பதும், விதிவிலக்கு களுக்குக்கட்டுப்படாது நடந்தால் கொடியராய் விடுவாரென்பதும், இன்னின்ன சந்தர்ப்பங்களில் இருவருக்கும் சில சம்பந்தங்களுண் டாமென்பதும் உரைக்கப்பட்டன.

(தொடரும்.)

ப,—அ.

தர்மம்.

(100-வது பக்கத் தொடர்ச்சி.)

பொருளும், இன்பமும், மோக்ஷமும் ஆகிய புருஷார்த்தங்கள் அறத்தின் பலனாய் அடைதற்குரியன ஆதலால் அவை தர்மத்தைப் பின்பற்றி நிற்கின்றன என்று மேலே சொல்லப்பட்டது. ஆகவே தர்மம் மற்றை உறுதிப்பொருள்களை அடைவதற்குக் காரணமா யிருப்பது இங்கே விரித்துரைக்கத் தக்கது.

ப்ரவ்ருத்தி மார்க்கம் என்றும் நிவ்ருத்திமார்க்கம் என்றும் தர்மம் இரண்டுவகையாகப் பிரிக்கப்படும். அவற்றுள் ப்ரவ்ருத்தி தர்மமாவது, க்ருஹஸ்தனான ஒருவன் கர்மப்ரதானனாய், போகங் களையும் அநுபவித்து, ஸத்பாத்திரத்திலே தானஞ்செய்தல் முத லான தன் ஆசிரமத்துக்கு ஒதிய தர்மாநுஷ்டானங்களை உடையவ னாதல். நிவ்ருத்தி தர்மமாவது, ஒருவன் நிலையாமையை உணர்ந்து உலகத்தைத்துறந்து தபோநிஷ்டனாய் ப்ரஹ்மஜ்ஞானத்தை

அடைந்து, ஆசையை வேரோடுகளைந்து, மோக்ஷத்தை அடைத லாம். இவற்றைத் தமிழர் முறையே இல்லறமென்றும் துறவற மென்றும் இரண்டு பகுப்புடையனவாகக் கூறுவர். இவற்றுள் முதலாவதான இல்லற ஒழுக்கத்தால் ஒருவன் அர்த்தத்தையும் காமத்தையும் அடைபவனாகிறான். இரண்டாவதான துறவொழுக் கத்தால் மோக்ஷத்தை அடைகிறான். ஆதலால் ப்ரவ்ருத்தியும் நிவ்ருத்தியுமாகி இருவகைப்பட்ட தர்மங்களும் முறையே பொரு ளின்பங்களையும், வீட்டினையும் அடைவதற்குக் காரணமாயுள்ளன வென்பது தெளிவாய் விளங்குகிறது.

அதற்கனுகுணமாகவே தர்மானுஷ்டானங்களைக் கைக்கொண் டுள்ள உத்தமர் அநேகர் உலகின்கண் எல்லாச்செல்வமும்பெற்று இன்பமெய்திவாழுகின்றனர். அநேகர்உண்ணஉணவும் உடுக்கஉடை யுமின்றித்தரித்திரர்களாய் வருந்துவதைக் கண்கூடாகக் கண்டிருக் கிறோம். ஸத்பாத்திரத்தில் தானம்செய்தல் முதலான நல்ல தர்மங் களைவளரச்செய்கிறவர்களுடைய க்ருஹத்தில் ஸ்ரீதாதேவி எப்பொ ழுதும் நீங்காமல், தன் செல்வம் நல்லவழியில் ப்ரயோஜனப்படுவ தைப் பார்த்து, முகமலர்ச்சியோடு நித்யவாஸம் செய்கிறாள் என்று சொல்லப்படுகிறது. அவ்வாறே அதர்மமுடைய ஒருவனை ஸ்ரீதேவி தன் தமக்கைக்குக் காட்டிக்கொடுத்து, தான் அவனை விட்டு நீங்கி விடுவாள். இவை தர்மத்திற்கும் அதர்மத்திற்குமுள்ள த்ருஷ்ட மான பலாபலன்கள். இவற்றால் செல்வம் உண்டாவதற்கு தர்மம் காரணமாகும் என்பதும், செல்வம் கெடுவதற்கு அதர்மம் காரண மாகும் என்பதும் நன்குபெறப்பட்டன.

இதுமட்டுமன்று, தர்மம் தன்பலனாகப் பொருளை அடைவித் தல் சிலவிடங்களில் அதிர்ஷ்ட ரூபமாகவும் உள்ளது. உலகத்தில் மனுஷ்ய ஜன்மமெடுத்தவர்கள் எல்லோரும் பிறப்பினால் ஒப்புமை யுடையவர்களேயாவர். ஆனால் அவர்கள் செல்வத்தாலும் பிறவற் றாலும் ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வுகள் உடையராயிருத்தல் யாவரும் நன்கறிந்தது. சிலர் தனவந்தராகவும் சிலர் ஏழைகளாக வும், சிலர் ரக்ஷகராகவும், சிலர் ரக்ஷியராகவும் இருக்கிறார்கள். இன் னும் இவ்வாறே பலவகையான வேறுபாடுகள் அவர்களுக்குள் காணப்படுகின்றன. ஒருவர் பல்லக்கிலேறிச்செலுத்தும் பாக்கிய முடையவராகவும், ஒருவர் அதனைத் தூக்கிச்சுமக்கும் துர்ப்பாக்

இய முடையவராகவும் இருக்கக் காரணம் என்ன? அவரவர்கள் பூர்வத்தில் செய்த தர்மாதர்மங்களின் பலாபலன்களே அவற்றிற் குக் காரணமல்லவா? ஆதலால் ஒருவர் செய்ததர்மமே மறுபிறப் பில் அவர் பொருளும் போகமும் எய்துதற்குக் காரணமாகின்ற தென்பது தெளியத்தக்கது.

ஆனாலும் தர்மசீலர்களான ஒரு சிலர் தமது பொருள் முதலிய வற்றை இழந்து துன்பமுறுகிறார்கள். அதர்மமே உடையார் ஒரு சிலர் ஆக்கத்தைப் பெற்று இன்பமெய்தி வாழ்கின்றனர். இது இவ்வுலகத்தில் இயல்பாக உள்ளது. ஆகையால் அந்த மாறுபாட் டைக்கொண்டு, ஆக்கமடைவதற்கு அறமே காரணமாகுமென்பது பொருந்தவில்லையே என்று சிலர் சந்தேகம் கொள்ளுதல் கூடும்.

அவர்கள், "அவ்விய நெஞ்சத்தானுக்கமும் செவ்வியான்-கேடு நினைக்கப்படும்" என்னும் தெய்வப்புலவர் திருவாக்கினைச் சிந்தித் துக்கொள்ளக்கடவர். குற்றமுள்ளமனத்தோடு அதர்மம் செய்பவ னுக்கு ஆக்கமும், செம்மையான மனதோடு தர்மமே செய்பவ னுக்குக் கேடும் ஒரோவழி உள்ளனவாயின் அவற்றிற்குக் காரணம் வேறுவகையான் ஆராயப்படும் என்பது அதன்பொருள். ஒருவ னுடைய ஆக்கத்திற்கு அவனுடைய தீவினையும் அழிவுக்கு நல் வினையும் ஒருபொழுதும் காரணமாகமாட்டா. ஆதலால் அவ ரவர்களுடைய பழவினையே அவற்றிற்குக் காரணம் என்று நினைக்க வேண்டும். பழவினையாவது முந்திய ஜன்மத்தில் செய்த நல்வினை தீவினைகளாம். ஆகவே முற்பிறப்பில் நிறைந்த நல்வினை உடைய வன், இப்பிறப்பில் தீவினை உடையவனாயினும், பழயதான நல் வினையின் பலனையே இப்பொழுது அனுபவிக்கிறான்; இப்பொழுது செய்த தீவினையின் பலனை இனிவரும்பிறப்பில் அடையக்கடவன் என்றும்; முற்பிறப்பில் நிறைந்த தீவினைபுரிந்தவன், இந்த ஜன்மத் தில் நல்வினையுடையவனாயினும், பழயதான தீவினையின் பயனையே இப்பொழுது அடைந்திருக்கிறான்; இப்பொழுது செய்த நல்வினை யின் பயனை இனிவரும் பிறப்பில் அனுபவிப்பான் என்றும் அதற்கு சமாதானம் கண்டுகொள்க.

அது நிற்க: களவு முதலான தீயவழிகளிலும் பொருளீட்டு தல் சாத்தியமாய் இருப்பதால் அதர்மமும் ஒரோவழி ஆக்கத் திற்குக் காரணமாமென்று சொல்லுதல் கூடாதோ என்னில்

கூடாது. ஏனென்றால், "களவினாலாகிய ஆக்கம் அளவிறந்(து)—ஆவதுபோலக்கெடும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. களவினால் ஒருவனுக்குக் கைப்படுகின்ற பொருளானது அப்பொழுது விர்த்திஆவது போலத்தோன்றும். ஆனாலும் அதிசீக்கிரத்தில் அது தன் எல்லையைக்கடந்து (அளவிறந்து) கெட்டுவிடும். அளவிறந்து கெடுதலாவது, தான் அழிந்துபோகும்போது பாவத்தையும் பழியையும் நிறுத்தி முன்பு செய்திருந்த தர்மத்தையும் உடன் கொண்டுபோதலாம். அன்றியும், "அழக்கொண்ட வெல்லாம் அழப்போம்" என்கிறபடியே, பிறர் வருந்தும்படி அபகரித்துக் கொண்ட அப்பொருள் தன்னைவிட்டு நீங்கும்போதும் அவனை வருந்தும்படியே செய்துபோகிறது. அப்போது அத்துன்பம் அவனுக்கு மிகக்கொடிதாய் இருக்கும். இந்த நிலையில்லாத பொருளை முன்பு நாம் தீயவழியில் அபகரித்துக்கொள்ளாமல் இருந்திருப்போமானால் இப்பொழுது இத்துன்ப மில்லையே என்று அவன் பலகாலும் பரிதபிப்பான். ஆதலால் அந்த அந்யாயார்ஜிதமான பொருள் முன்பு வளருவதுபோலத் தோன்றுவதெல்லாம் பின்பு கெடுதலால் உண்டாகும் துன்பத்தை அளவிறந்ததாகச் செய்வதற்கே என்பது அறியத்தக்கது. ஆதலால் அதர்மத்தால் வந்த பொருளின் வளர்ச்சியை வளர்ச்சியாகக் கருதாமல் அது எவ்வளவுக்கெவ்வளவு விர்த்தியாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு கேட்டிற்கே காரணமென்று நினைக்கவேண்டும். ஆக இதுவரை சொல்லிய விஷயங்களால் அதர்மம் அழிவுக்கே காரணமாவதன்றி ஆக்கத்திற்குக் காரணமாகாதென்பது நன்குபெறப்பட்டது.

இனி தர்மம்செய்வது பொருளின் அபிவிர்த்திக்குக் காரணமாகும் என்று மேலே சொல்லப்பட்ட விஷயமும் பொருந்தாமையுடையதுபோலச் சிலர்க்குத் தோன்றலாம். ஒருவன் தன் நிதியை தானம் முதலான தர்மவழிகளில் செலவிடும்போது அது குறைந்துவிடுகிறது; ஆதலால் அறஞ்செய்தல் பொருளினுடைய அழிவுக்கே காரணமாவதன்றி, அதன் வளர்ச்சிக்குக் காரணமாகும் என்று சொல்லுதல் பொருந்தாதே என்பது சங்கை.

தர்மவழிகளில் செலவிடும்போது ஒருவனுடைய செல்வம் குறைவடைதல் உண்மையே; ஆனாலும் அவனுடைய தனத்தை அழிப்பதே தர்மத்தின் கார்யம் என்று சொல்வது சிறிதும் ஒவ்

வாது. செல்வம் ஓரிடத்திலும் நிலைத்திருப்பதில்லை. எவ்வழியானும் அழிவடைதலேயே அது இயல்பாகவுடையது. தர்ம வழியில் செலவிடாது சேர்த்துவைக்கும் பொருள்கள்யாவும் வேறு எவ்விதத்தாலாயினும் அழிந்து ஒழிதல் உலகறிந்த உண்மையே யாகும். ஆகையால் அவ்வாறு வேறுகாரணத்தை விரும்பாமலே தன்னடைவேயாக அழியக்கூடியசெல்வத்தைத்தர்மத்தில்விநியோகிக்கும்போது அவ்வறம் அதன்அழிவுக்கு வ்யாஜமாத்ரமாக அமைகிறதே அல்லாமல் பொருட்கேட்டிற்கு நேரே காரணமாகுமென்று சொல்லமுடியாது. அன்றியும், ஒருவர்த்தகன் வ்யாபாரத்தின் பொருட்டு முதலில் சிறிது தனத்தைச் செலவழித்துப் பின்பு அதன்பலனைகப் பெரியலாபத்தை அடைகிறான் என்பதை உதாரணமாக எடுத்துக்கொள்வோம், அவன் செய்த வ்யாபாரமாகிற தொழில் அவனுடைய செல்வத்தின் அழிவுக்குக் காரணமென்று சொல்லுவதா? அல்லது ஆக்கத்திற்குக் காரணமென்று சொல்லுவதா? அவ்வியாபாரம் அவனுடைய செல்வ வ்ருத்திக்குக் காரணமாயிற்று என்றுதானே சொல்லவேண்டும்? அதுபோலவே அறமும் முதலில் சிறிது பொருட்செலவை உண்டாக்கினாலும், பின்பு அதனினும் பலமடங்கு அதிகமானதும் இம்மையினும் மறுமையினும் இன்பத்தைத் தரத்தக்கதுமான பொருளை அளித்தலால் அது ஆக்கத்திற்கே காரணமாகும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் மேலே த்ருஷ்டாந்தமாகக்காட்டிய வ்யாபாரியின் தொழிலில் பொருளடைதல் த்ருஷ்டபலமாகவுள்ளது. தர்மம் செய்வதனால் பொருளடைதல், சிலவிடங்களில் த்ருஷ்டபலமாகவும் சிலவிடங்களில் அதிர்ஷ்டபலமாகவும் உள்ளது. அதிர்ஷ்ட பலத்தில் ஒருவரும் நம்பிக்கை கொள்ளாமல் இருக்கமுடியாது. ஏனெனில் ஒருவன் செய்த புண்ணியமும் பாவமும் செய்த முறையே செய்தவனை நாடிச்சென்றடைகின்றன என்பது எல்லாமதத்தினர்க்கும் ஒப்பமுடிந்ததொன்றும். ஆதலால் ஒருவன் செய்த தர்மம் எந்தவிதத்திலும் வ்யர்த்தமாவதில்லை. அது எக்காலத்திலேனும் அவனுக்கு உதவுகின்றது. அதுபற்றியே தர்மம் தலைகாக்கும் என்ற பழமொழியும் வழங்குகிறது.

(தொடரும்.)

T. N. அப்பனையங்கார்,
மதுரை.